2021 - இதழ் 07 இலவசம்

ஆடி - 2021

# உள்ளான மனிதன்

மென்பிரதி

GRACE TABERNACLE
APOSTOLIC CHURCH

gtachurch.ca

# உள்ளான மனிதன்

மாதாந்தர சஞ்சிகை - இலவசம் 2021 - இதழ் 07

## ஆண்டவர் இயேசு சொன்னார்:

**???**

உள்ளூர் சபையின் தொடர்புகளுக்கு

நீங்கள் தற்போது கிறிஸ்தவ **ஆவிக்குரிய** ஐக்கியமொன்றிலே இணைந்திருந்தால், அங்கே கருத்தோடு தேவனை சேவித்து, உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்தி, இயேசு கிறிஸ்துவுக்குள், உங்களைக் குறித்ததான பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுங்கள்.

# இந்த இதழில்...

## 2021 - இதழ் 06


பக்கம் **4**

### எனது எதிர்காலம்

தேவனுடைய கரத்தில் ஆசீர்வாதமான வருஷங்களுண்டு. கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களே, நீங்களெல்லாரும் திடமனதாயிருங்கள், அவர் உங்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்.

பக்கம் **6**

### நன்மை செய்யும் தேவன்

நாம் குழந்தைகளாகவும், சிறுவர்களாகவும் இருந்த போது, அந்தப் பருவங்களிலே நம் பெற்றோர் நாம் நினைத்ததை செய்து முடிக்கும்படி விட்டிருந்தால் நம்முடைய நிலையை எப்படியாக இருந்திருக்கும்?

பக்கம் **13**

### பிரசங்கக் குறிப்புகள்

தேவனுக்கு உகந்த பலி எது என்பதைக் குறித்து தேவனுடைய வார்த்தை தெளிவாக எடுத்துக் கூறுகின்றது. ஐக்கியமாக வாழ்வதெப்படி என்பதற்குரிய வழியை தேவனுடைய வார்த்தை தெளிவாக கூறுகின்றது.

பக்கம் **15**

### புதிய நாளுக்குள்...

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.


**கிரேஸ் (ற்)ரபனக்கல்**


**PLACE OF WORSHIP**
210 Silver Star Blvd., Unit #807
Scarborough, ON M1V 5J9, Canada

**MAILING ADDRESS**
7700 Markham Road, P.O. Box 3052
Markham, ON L3S 4T1, Canada

☎ 416.613.2909

gtachurch.ca/contact


gtachurch.ca

# புதிய நாளுக்குள்...

அனுதின தியானக் குறிப்புக்கள்

தலைப்பு அகராதி 15ம் பக்கத்திலிருந்து...

**மனக்குழப்பமான, சோர்வான நேரங்களில்**
... ஜூலை 1, 3, 6, 7, 8, 10, 11, 21, 22, 23, 24, 26

**போராட்டங்களில், பிசாசின் தந்திரங்களில் வெற்றி**
... ஜூலை 2, 3, 6, 7, 8, 11, 14, 15, 18, 20, 22, 24, 25, 26, 29, 31

**பாவத்திலிருந்து விடுதலையடையும் வழி உண்டு**
... ஜூலை 5, 7, 9, 12, 13, 15, 18, 21, 27, 29, 30, 31

**முக்கிய தீர்மானங்களை எடுக்கும் முன்**
... ஜூலை 2, 3, 7, 8, 10, 11, 23, 24, 25, 26, 27, 29

**சமரசமான வாழ்க்கை வேண்டாம்**
... ஜூலை 2, 7, 9, 13, 22, 23, 24, 28, 29

**தெய்வீக ஆசீர்வாதங்கள்**
... ஜூலை 3, 8, 10, 21

**தேவனுடைய சித்தம் நிறைவேறட்டும்**
... ஜூலை 6, 8, 11, 14, 16, 17, 23

**தேவனுக்குப் பிரியமான வாழ்க்கை**
... ஜூலை 4, 8, 9, 11, 12, 14, 15, 16, 17, 28, 31

**சமாதானமும் அமரிக்கையுமான வாழ்க்கை உண்டு**
... ஜூலை 1, 8, 10, 26

**பொறுமையோடு காத்திருங்கள்**
... ஜூலை 3, 6, 10, 11, 16, 17, 19, 20, 24

**தேவ நீதி வெளிப்படும்**
... ஜூலை 6, 11, 15, 19, 20, 27, 30

**திவ்விய சுபாவங்கள் வெளிப்படட்டும்**
... ஜூலை 4, 8, 12, 14, 16, 19, 20, 30

**வாழ்வு தரும் திருவசனம், ஐக்கியத்தின் மேன்மை**
... ஜூலை 1, 9, 12, 13, 16, 27, 28

**மேட்டிமை, வன்மம், பகை தலைதூக்கும் போது...**
... ஜூலை 5, 9, 13, 15, 17, 19, 20, 27, 28, 30, 31

# எனது எதிர்காலம்

*போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்*

"மனுஷனுக்கு செம்மையாய் தோன்றுகிற வழியுண்டு: அதின் முடிவோ மரண வழிகள்." என்று பரிசுத்த வேதாகமத்தில் (நீதி.16:25) எழுதியுள்ளது. ஒவ்வொரு மனிதனும் தனக்கு சரியெனத் தோன்றும் வழியிலே போகின்றான். அதுவே அவனுக்குச் செம்மையாய்த் தோன்றுகின்ற வழியாயுள்ளது. ஆனால் அதுவோ மரண வழிகளிலொன்றில் முடிவடைகிறதாயுள்ளது.

இவ்வுலகில் மனிதர்கள் தாம் காண்கின்ற வாழ்வியல் அடிப்படையிலே தமது வாழ்வை வாழ்கின்றார்கள். அதற்கேற்பவே தமது வழியை அதற்கேற்ப தெரிந்துகொள்ளுகிறார்கள். இவ்வுலகத்திலுள்ளவைகள் யாவும் அழிவுள்ளவைகள். அதினாலே இவ்வுலகத்திற்குரிய வழிகள் எல்லாம் மரண வழிகளாயுள்ளது.

மரணமில்லாத வழியானது நித்தியஜீவனுள்ள வழியாகும். "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை (இயேசுவை) விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்." என்று இயேசுகிறிஸ்து கூறியுள்ளார்.

## இங்கு நித்தியஜீவனைப் பெறுகிறவன் யார்?

தேவனுடைய ஒரேபேறான குமாரன் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவன் எவனோ அவனே. அவன் மாத்திரமே கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடைவான். "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்" என்று இயேசுகிறிஸ்து கூறியுள்ளார்.

மேலும் அவர் கூறுகையில், "நான் அவைகளுக்கு (அவரது ஆடுகளுக்கு) நித்தியஜீவனைக் கொடுக்கிறேன், அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை." என்றும்,

"குமாரனைக் (இயேசுகிறிஸ்துவைக்) கண்டு, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்தியஜீவனை அடைவதும், நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவதும், என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது" என்றும் கூறியுள்ளார்.

## எதிர்காலம்

இயேசுகிறிஸ்து இல்லதா எதிர்காலம் மனிதனை நரகத்தில் கொண்டுபோய் சேர்க்கும்.

இயேசுகிறிஸ்துவுடனான எதிர்காலம் மனிதனை நித்திய ஜீவனைப்பெற்று வாழ பரலோகத்தில் கொண்டுபோய் சேர்க்கும்.

தேவன் ஆபிரகாமுக்களித்த வாக்கின்படியே இஸ்ரவேலரைத் தமது ஓங்கிய புயத்தினால் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து கானான் தேசத்திற்கு அழைத்துச் சென்றார். வழியிலே அவர்கள் பல சவால்களை எதிர்நோக்கியபோது, தேவன் தம்மை பராமரித்துக் காத்து வழிநடத்துவார் என்பதை அவர்கள் மறந்து தேவனைவிட்டு வழி விலகிப்போனார்கள்.

நித்தியஜீவனை எமக்கு வாக்களித்து பாவக்கட்டுகளிலும் பிசாசின் அடிமைத்தனத்திலும் உலகவழிபாடுகளிலுமிருந்து விடுதலையாக்கின தேவன் இப்பூமியில் நாம் வாழத்தேவையானவற்றை அருளி வழிநடத்துகிறவராயுள்ளார்.

ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு, நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கினவரும், இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதா உண்மையுள்ளவராயுள்ளார்.

தேவனே என் காலங்கள் உமது கரத்திலிருக்கிறது என்று தாவீது தனது சங்கீதத்தில் பாடியுள்ளார். ஆம் காலங்கள் கர்த்தருடைய கரத்திலுண்டு. மேலும் சங்கீதத்திலே (சங்.77)உன்னதமானவருடைய வலதுகரத்திலுள்ள வருஷங்களை நினைவுகூருவேன் என்று தனக்குண்டான இக்கட்டுகளில் தாவீது பாடியுள்ளதைக் காண்கிறோம்.

தேவனுடைய கரத்தில் ஆசீர்வாதமான வருஷங்களுண்டு. கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களே, நீங்களெல்லாரும் திடமனதாயிருங்கள், அவர் உங்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார். (சங்.31:24)

பிரியமான சகோதரனே சகோதரியே,
இயேசு இல்லாத எந்த வழியும் மரணவழிகளில் முடிகின்றது. ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை என்றவர் இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன், உன் மதில்கள் எப்போதும் என்முன் இருக்கிறது என்று சொல்லியுள்ளார்.

தேவனிடத்தில் திடமனதாயிரு அவர் உன்னை ஆசீர்வதிப்பாராக.

எம்மோடு கூட ஜெபிக்க விரும்பினால் ஞாயிறு காலை 10:00 மணிக்கு நேரலையில் **www.gtachurch.ca/live** இணையதளத்தின் வழியாக தேவ ஆராதனையில் கலந்து கொள்ளும்படி உங்களை அழைக்கின்றேன்.

## கிருபையின் கூடாரம் அப்போஸ்தல சபை

**ரொரன்ரோ, கனடா ☎ 416.613.2909**

# நன்மை செய்யும் தேவன்

ஒரு பெண்ணானவள் மாலையிலே இருள்சூழும் முன்பு, வழக்கம்போலவே விளக்கின் சிம்மினியிலிருந்த (விளக்கின் புகை போக்கும் மேற்க்கூடு) கரும்புகையை கழுவி அதை நன்றாக துடைத்து, விளக்கையேற்றி மேசையில் வைத்தாள். அதைப் பார்த்துக் கொண்டிருந்த அவளுடைய குழந்தையானது, விளக்கின் சிம்மினியை பிடிக்கும்படியாக ஓடிச் சென்றது. அதைக் கண்ட அந்தக் குழந்தையின் தந்தையானவர், துரிதமாக சென்று தன் பிள்ளையை தூக்கிக் கொண்டார். தான் நினைத்ததை செய்ய முடியாமல், தன் தந்தையார் தன்னை தடுத்து நிறுத்திவிட்டார் என்று அந்த குழந்தையானது சத்தமிட்டு அழுது கொண்டிருந்தது. அன்றைய நாளிலிருந்து, அந்த வீட்டார், விளக்கையேற்றி குழந்தைக்கு எட்டாத படிக்கு ஒரு பாதுகாப்பான உயரத்திலே அந்த விளக்கை வைத்தார்கள்.

ஒரு குழந்தையானது தன் அறிவுக்கு எட்டடியபடியே சிந்திக்கின்றது. அது தான் காண்பதெல்லாம் அதன் விளையாட்டுப் பொருள். தான் நினை த்ததெல்லாம் தன்னுடையது. நிலத்திலே விழுந்திருக்கும் எந்த பொரு ளையும் எடுத்து, தன் வாய்குள் போடும்படியாக அதைக் கொண்டு செல்லும். மேலே கூறப்பட்ட சம்பவத்திலே, அந்த விளக்கின் சுடர், சிம் மினியூடாக அந்தக் குழந்தையின் பார்வைக்கு அழகாக காட்சியளித்தி ருக்கும். தன் தாயளானவள் தினமும் அதை தொடுகின்றாளே நான் ஏன் அதை தொடக் கூடாது என்பதே அந்தக் குழந்தைக்கு அதன் அறிவுக்கு எட்டிய காரியமாக இருக்கும். எனவே, அது தன் அறியாமையினாலே தன்னை தடுத்து நிறுத்திய தந்தையின்மேல் அது கோபம் கொண்டது.

யார் அந்தக் குழந்தைக்கு அதன் செய்கை பெரும் ஆபத்தில் முடியும் என அறிவு புகட்ட முடியும்? விளக்கம் அறியாத பருவம். எனவே, தங்கள் குழந்தைகளை உண்மையாய் நேசிக்கின்ற தாய் தந்தையர், அந்த குழ ந்தை தன் அறிவில் வளரும்வரைக்கும், தங்கள் குழந்தையின் இஷ்டப்படி எல்லாவற்றையும் செய்து கொள்ள இடம் கொடுக்க மாட்டார்கள். உங் களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் அவனுக்குப் பாம்பைக்கொடுப்பானா? ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும் போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா? என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். (மத்தேயு 7:9-11)

## தங்கள் பிள்ளைகளுக்கு நன்மையானவைகள் எவை என்பதை யார் அறிந்திருக்கின்றார்கள்?

இன்று இவ்வுலகத்திலே ஞானிகள் என்று கருத ப்படுகின்றவர்கள் நன்மை எது என்பதை அறிந்திருக்கின்றார்களா? இப்பிர பஞ்சத் தர்க்கசாஸ்திரிகள் நன்மை எது என்பதை அறிந்திக்கின்றார்களா? அரசியல்வாதிகள் மற்றும் பொதுநல வாதிகள் அறிந்திருக்கின்றார்களா? இவர்கள் யாவரும் இந்த உலகத்திலே பெற்றோர்களாகவும் இருக்கின் றார்கள். பெற்றோர்கள்

தங்கள் பிள்ளைகளுக்கு நன்மை எது என்பதை அறிந்திருக்கின்றார்களா? அல்லது பிள்ளைகள் தங்கள் வாழ்க்கைக்கு நன்மை எது என்பதை அறிந்திக்கின்றார்களா?

இந்த உலகமானது, "இது உன் வாழ்க்கை, உன் கனவை பின்பற்று" என்ற பிரமாணத்தையே கற்பிக்கின்றது. இந்த அபாயகரமான வலையத்திற்குள் கிறிஸ்துவை அறிந்தவர்கள் என்று கூறும் ஒருசிலர்கூட அகப்பட்டுவிடுகின்றார்கள்.

"வாலிபனே! உன் இளமையிலே சந்தோஷப்படு, உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும் உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட ஆனாலும் இவையெல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டுவந்து நிறுத்துவார் என்று அறி." (பிரசங்கி 11:9)

"வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம்பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுகிறதினால்தானே." (சங்கீதம் 119:9)

"என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல. உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப்பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது." (ஏசாயா 55:8-9)

"மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு. அதின் முடிவோ மரண வழிகள்." (நீதிமொழிகள் 14:12)

## நன்மையான ஈவு எங்கே இருந்து வருகின்றது?

நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது. அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை. (யாக்கோபு 1:17)

எனவே, பிதாவையும், பரலோகத்தையும் அறியாத இவ்வுலக ஞானிகள், வேதபாரகர், தர்க்கசாஸ்திரிகள் எப்படி நன்மையானவைகளை அறிவார்கள்? இந்த உலகத்தின் போக்கில் நடக்கின்றவர்கள் பிதாவினால் உண்டானவர்கள் அல்ல. ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள். உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம் தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான். (1 யோவான் 2:16-17)

## நன்மையான ஈவை அறிந்தவர் யார்?

ஆண்டவராகிய இயேசு ஒருவரே, பிதாவாகிய தேவனையும், பரலோகத்தையும், பரலோகத்திற்குரியவைகளையும் அறிந்திருக்கின்றார்.

பரலோகத்திலிருந்திறங்கினவரும் பரலோகத்திலிருக்கிறவருமான ஆண்டவர் இயேசுவையல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனு மில்லை (யோவான் 3:13). அவரே பரலோகத்தின் வழியும் பரலோகத்தில் வாசலுமாயிருக்கின்றார்.

மேலும், “நான் மெய்யான திராட்சச்செடி, என் பிதா திராட்சத் தோட்டக்காரர். என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப்போடுகிறார் கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார். நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள். என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன் கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாததுபோல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள். நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான் என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது” என்றும் ஆண்டவர் இயேசு கூறியிருக்கின்றார்.

## நன்மையானதை கற்றுக் கொடுக்கின்றவர் யார்?

இயேசு இந்த உலகத்திலே இருந்த நாட்களிலே, மனந்திரும்புதல், பாவமன்னிப்பு, மறுபடி பிறத்தல், பரிசுத்தமாகுதல், பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுதல், நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ளுதல் போன்ற காரியங்களை குறித்து தம்முடைய சீஷர்களுக்கு கூறினார். ஆனால் அவர்களுக்கோ அவை ஒன்றும் புரியவில்லை. சில சந்தர்ப்பங்களிலே, சீஷர்கள் இயேசுவை நோக்கி: யார்தான் பரலோகத்திற்கு போக முடியும் என்று ஆச்சரியத்தோடு கேட்டார்கள். இயேசு அவர்களை நோக்கி: நான் பரலோகத்திற்கு போன பின்பு, உங்களோடு என்றென்றைக்கும் இருக்கும்படி, தேற்றரவாளனாகிய சத்திய ஆவியானவரை அனுப்புவேன், அவர் வந்து, பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக்குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார். அவர்கள் என்னை விசுவாசியாதபடியினாலே பாவத்தைக்குறித்தும், நீங்கள் இனி என்னைக் காணாதபடிக்கு நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினாலே நீதியைக்குறித்தும், இந்த உலகத்தின் அதிபதி நியாயந்தீர்க்கப்பட்டதினாலே நியாயத்தீர்ப்பைக்குறித்தும், கண்டித்து உணர்த்துவார். இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள். சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார் அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார். பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள் அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றார். நான் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால் கொஞ்சக்காலத்திலே என்னைக் காணாதிருப்பீர்கள், மறுபடியும் கொஞ்சக்காலத்திலே என்னைக் காண்பீர்கள் என்றார். (யோவன் 16:8-16, லூக்கா 24:49, அப்போஸ்தலர் 1:4-5)

பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசுவைக் கர்த்தரென்று ஒருவனும் சொல்ல முடியாது. (1 கொரி 12:3) பரிசுத்த ஆவியை அறியாதவன் கர்த்தராகிய இயேசுவை அறியான். இயேசுவைக் கிறிஸ்து அல்ல என்று மறுதலிக்கிறவனேயல்லாமல் வேறே யார் பொய்யன்? பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிறவனே அந்திக்கிறிஸ்து. குமாரனை மறுதலிக்கிறவன் பிதாவை உடையவனல்ல, குமாரனை அறிக்கையிடுகிறவன் பிதாவையும் உடையவனாயிருக்கிறான்.

இந்த உலக ஞானிகளில், வேதபாரகர்களில், தர்க்கசாஸ்திரிகளில் யார் பரிசுத்த ஆவியை உடையவர்களாக இருக்கின்றார்கள்? அப்படி அவர்கள் பரிசுத்த ஆவியையும் தேவத்துவத்தையும் அசட்டை பண்ணுகின்றவர்களாக இருந்தால், பரலோகத்தின் வழியும், வாசலுமாகிய ஆண்டவர் இயேசுவை எப்படி அறிவார்கள்? இயேசுவை அறியாதிருந்தால் அவர்கள் எப்படி நன்மையான ஈவை அறிவார்கள்? அவர்களுடைய பேச்சுக்களும் வழிகளும் நன்மையானதாக தோன்றும், ஆனால் அதன் முடிவிலே நித்திய ஜீவன் இருக்காது, மாறாக நித்திய மரணமே இருக்கும்.

# அறியாத நாட்கள்

நாம் கிறிஸ்துவை அறிந்த ஆரம்ப நாட்களிலே, கிறிஸ்துவுக்குள் மறுபடியும் பிறந்த குழந்தையாயிருந்தபோது குழந்தையைப்போலப் பேசினோம், குழந்தையைப்போலச் சிந்தித்தோம், குழந்தைகளைப் போல பேசினோம் அதாவது குழந்தைத்தனமாக நடந்து கொண்டோம். குழந்தைகளைப் போல கபடற்றவர்களாக நாம் இருக்க வேண்டும். ஆனால் புத்தியிலே குழந்தைகளாயிக்கக் கூடாது. புத்தியிலோ தேறினவர்களாக இருக்க வேண்டும். கிறிஸ்துவுக்குள் பூரண புருஷர்களாக அவருடைய சாயலிலே வளர வேண்டும். எனவே, நீங்கள் புத்தியிலே குழந்தைகளாயிராதேயுங்கள் துர்க்குணத்திலே குழந்தைகளாயும், புத்தியிலோ தேறினவர்களாயுமிருங்கள என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது.

அப்படியாக மனிதர்கள் குழந்தைத்தனமாக இருக்கின்ற நாட்களிலே, பொறாமையும், வாக்குவாதமும், கட்சி பேதகங்களும் மனதுக்குள் இருக்கும். அதாவது, தன் தாயானவள் ஏற்றிய விளக்கின் சிம்மினியை தான் பிடிக்க வேண்டும் என்று ஓடிச் சென்ற குழந்தையைப் போல, தனக்கு ஏற்படக்கூடிய ஆபத்து இன்னது என்று அறியாதிருந்தது. நாம் குழந்தைகளாகவும், சிறுவர்களாகவும் இருந்த போது, அந்தப் பருவங்களிலே நம் பெற்றோர் நாம் நினைத்ததை செய்து முடிக்கும்படி விட்டிருந்தால் நம்முடைய நிலையை எப்படியாக இருந்திருக்கும்? பாடசாலைக்கு செல்லும் நாட்களிலே, ஆசிரியர்கள் நான் நினைத்த பிரகாரம் நம்மை விட்டிருந்தால் நம் நிலை என்னவாக முடிந்திருக்கும்? சற்று சிந்தித்துப் பாருங்கள்! அதுபோலவே, நம்மீது அன்புகூர்ந்த தேவனாகிய கர்த்தர், நாம் கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாக இருந்த போது, நாம் நினைத்த வழியில் நம்மை நடக்க விடாமலும், நாம் கேட்டதெல்லாவற்றையும் நமக்கு கொடுக்காமலும், நம் வாழ்க்கையிலே நமக்கு நன்மையானதை கொடுத்து, அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்து வருகின்றார். (பிரசங்கி 3:11, 1 கொரிந்தியர் 3:1-3, 13:11)

நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள். (1 யோவான் 3:1)

மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாக தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார். (கலாத்தியர் 4:6)

ஒரு மனிதன் தன் பிள்ளையைச் சுமந்துகொண்டு போவதுபோல, நீங்கள் இவ்விடத்திற்கு வருகிறவரைக்கும், நடந்து வந்த வழிகள் எல்லாவற்றிலும், உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சுமந்துகொண்டு வந்ததைக் கண்டீர்களே. (உபாகமம் 1:31)

தாயின் வயிற்றில் தோன்றினதுமுதல் உங்களை ஏந்தி, தாயின் கர்ப்பத்தில் உற்பத்தியானதுமுதல் உங்களைத் தாங்கினேன். உங்கள் முதிர் வயதுவரைக்கும் நான் அப்படிச் செய்வேன் நரைவயதுமட்டும் நான் உங்களைத் தாங்குவேன் நான் அப்படிச் செய்துவந்தேன் இனிமேலும் நான் ஏந்துவேன், நான் சுமப்பேன், தப்புவிப்பேன். (ஏசாயா 46:3-4)

**மேய்ப்பனைப்போலத் தமது மந்தையை மேய்ப்பார் ஆட்டுக்குட்டிகளைத் தமது புயத்தினால் சேர்த்து, தமது மடியிலே சுமந்து கறவலாடுகளை மெதுவாய் நடத்துவார். (ஏசாயா** 40:11)

அன்றியும்: என் மகனே, கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவரால் கடிந்துகொள்ளப்படும்போது சோர்ந்துபோகாதே. கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திமதியை மறந்தீர்கள். நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார் தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ? எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்குக் கிடையாதிருந்தால் நீங்கள் புத்திரராயிராமல் வேசிப்பிள்ளைகளாயிருப்பீர்களே. அன்றியும், நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மைச் சிட்சிக்கும்போது, அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க, நாம் பிழைக்கத்தக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாய் அடங்கி நடக்கவேண்டுமல்லவா? அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி கொஞ்சக்காலம் சிட்சித்தார்கள் இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும்பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார். எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும் ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும் என்று பரிசுத்த வேதாகமம் நம் பரம பிதாவின் சிட்சையை குறித்து அழகாக எடுத்துக் கூறுகின்றது.

**காலாகாலமாக இந்தப் பூமியிலே, தாய்க்கு அன்பு வற்றிப்போகுமோ என்ற கூற்றை சொல்லிக் கொள் வார்கள்.**

இன்றைய உலகிலே, தன் பிள்ளைகளை வெறுக்கின்ற தாய்மார்கள் இருக்கின்றார்கள் என்று செய்திகள் வழியாக ஆங்காங்கே கேள்விப் படுகின்றோம். சில சமுதாய சீர்குலைவினால், இளமைப் பருவத்திலே, தாயாகிய சில பெண்கள், தங்கள் குடும்ப அவமானம் என்ன ஆகும் என்று குழந்தைகளை கைவிட்டுவிடுகின்றார்கள். "என் கருவை உம்முடைய கண்கள் கண்டது" (சங்கீதம் 139:16) என்றும் "இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்." (சங்கீதம் 127:4) என்றும் பரிசுத்த வேதாகமத்திலே வாசிக்கின்றோம். ஆனால் இன்றைய உலகிலே கருவை கலைத்து கொள்வது பெண்கள் சுதந்திரம் என்று சில முற் போக்குவாதிகள் கருதுகின்றார்கள். இப்படியாக இந்த உலகிலே சிலர் தங்கள் குழந்தைகளை மறந்து போய்விடுகின்றார்கள். விளக்கமறியாத, கபடற்ற குழந்தைகளுக்கு தாயின் அன்பு எவ்வளவு அவசியம் என்பதை உணராது போகின்றார்கள்.

ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை. இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன் என்று தேவனாகிய கர்த்தர் வாக்குரைத்திருக்கின்றார். (ஏசாயா 49:15-16)

**தேவனாகிய கர்த்தர்தாமே, நமக்கு நல்ல தந்தை யாக இருக்கின்றார். நம்மை கண்டித்துணர்த்தி, சகல சத்தியத்திலும் வழிநடத்தும் ஆசானாக இரு க்கின்றார்.**

## வருங்காலத்தை அறிந்தவர்

ஒரு மனிதனானவன், தான் வேலை செய்யும் தொழிற்சாலையிலே, ஒரு குறிப்பிட்ட பதவியுயர்வுக்காக எதிர்பார்ப்போடு, கடுமையாக வேலை செய்து வந்தான். அந்த பதவியுயர்வு அவனுக்கு கிடைப்பதற்கு தடைகள் எதுவும் இருக்கவில்லை. ஆனால் குறிப்பிட்ட நாள் வந்ததும், அங்கு வேலை செய்யும் இன்னுமொரு தொழிலாளி அந்த பதவியை இவனிட மிருந்து தட்டிக் கொண்டான். பதவியுயர்வை எதிர்பார்த்து கண்ணியமாக வேலை பார்த்து வந்த அந்த மனிதனானவன் ஏன் தனக்கு அந்த பதவியுயர்வு கிடைக்கவில்லை என்று தன் மனதிலே நொந்து கொண் டான். அந்தப் பதவியுயர்வை பெற்றுக் கொண்ட மற்றய தொழிலாளி அந்தப் பதவியை பெறுவதற்கு அனுபவமுள்ளவனாக இருந்தான். அப்படி

யிருந்தும் அந்த வேலையிலே பல கடுமையான சவால்கள் இருந்ததால், அதை எதிர்நோக்க முடியாமல், பல மாதங்களுக்கு பின், பதவி நீக்கம் செய்யப்பட்டான். அந்த வேளையிலே அந்தப் பதவியுயர்வுக்காக கடுமை யாக வேலை செய்து வந்த அந்த மனிதனானவன், அந்தப் பதவியுயர்வு தனக்கு கிடைகாதது நல்லது என்று உணர்ந்து கொண்டான். தனக்கு நன்மையானது என்று அவன் எதிர்பார்த்திருந்த அந்த வேலை தனக்குரி யதல்ல, அது தன் வாழ்விற்கு தீமையை விளைவித்திருக்கும் என்று அறிந்து, தேவனுக்கு நன்றி செலுத்தினான்.

இப்படியாக நம்முடைய வாழ்விலே நாம் எதிர்பார்த்திக்கும் சில காரிய ங்கள் நாம் எதிர்பார்த்தபடி நடப்பதில்லை. ஒருவேளை அதற்காக பல முறை தேவனிடத்திலே ஜெபம் செய்திருக்கலாம். நம்மை நேசிக்கின்ற நம்முடைய பரம பிதா, நம்முடைய வாழ்க்கைக்கு எது நன்மை எது தீமை என்பதை அறிந்திருக்கின்றார். சில வேளைகளிலே, நம்முடைய கண்க ளுக்கு நன்மையாக தோன்றுகின்ற காரியங்களால் நமக்கு தீங்கு உண் டாகலாம் என்பதை அவர் அறிந்திருக்கின்றார்.

**அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப் பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்க ளுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிற தென்று அறிந்திருக்கிறோம். (ரோமர் 8:28)**

பிரியமானவர்களே, பிதாவாகிய தேவன் நம்மில் அன்புகூருகின்றார் என்பதை உண்மையிலே விசுவாசித்தால், அவர் நமக்கு தீமை செய்ய மாட்டார் என்பதை அறிந்து, அதன்படிக்கு அவருடை திருச்சித்தம் நம் வாழ்வில் நிறைவேற இடங்கொடுங்கள். நான் நினைத்தவைகள் யாவும் நான் குறித்த நேரத்தில், என்னுடைய வாழ்வில் நடைபெற வேண்டும் என்பது குழந்தைகளுக்குரிய பேச்சாக இருக்கின்றது.

சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும் கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது. நித்திய ஜீவனை பெற்று பரலோகத்தில் நீடூழியாக வாழ்வதே நம்முடைய வாழ்வின் பிரதானமான நன்மையாகும். அந்த பிரதானமான நன்மையைத் தடை செய்யும் எந்தக் காரியத்தையும், நம்முடைய பிதாவாகிய தேவன் நம் வாழ்வில் அனுமதிக்க மாட்டார் என்பதை அறிந்து கொள்ளுங்கள். தமது விருப்பம் போல நம்மை நடத்தி முடிவிலே நம்மை மகிமையிலே சேர்த்துக் கொள்வார்.

அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு பலன் அளிக்கும் கர்த்தர் உங்களை ஸ்திரப்படுத்தி, திடப்படுத்தி வழிநடத்திச் செல்வாராக. ஆமேன்!

# மனப்பொருந்தி செவி கொடுத்தால்

**பிரசங்கக் குறிப்புக்கள்** - போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்

**[IF YOU WOULD LIKE TO LISTEN TO THE FULL VERSION OF THIS MESSAGE IN ENGLISH OR TAMIL, FOLLOW THE LINK THAT IS PROVIDED AT THE END THIS SERMON NOTES]**

## பிரதான வாசகம் - ஏசாயா 1:19

இஸ்ரவேல் ஜனங்கள், எகிப்து தேசத்திலே சுமார் 400 வருடங்கள் அடிமைகளாக இருந்தார்கள். தேவனாகிய கர்த்தர் தாமே, முன்னுரைத்தபடியே அவர்களை அந்த அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து, அவர்களை வழிநடத்திச் சென்று, செழிப்புள்ள கானான் தேசத்தை அவர்களுக்கு கொடுத்தார். நீங்கள் சென்றடையும் தேசத்திலே, உங்களை ஆளோட்டிகள் வேதனைப்படுத்துவதில்லை என்று கூறியிருந்தார். பல ஆண்டுகளுக்கு பின்னர், இஸ்ரவேல் ஜனங்கள் பெலிஸ்தியரினால் பெரிதும் துன்பப்படுத்தப்பட்டார்கள். அந்நாட்களிலே, சாமுவேல் என்னும் தீர்க்கதரிசியை தேவன் எழுப்பினார். ஒரு சமயம், சாமுவேல் ஜனங்கள் யாவரையும் மிஸ்பா என்னும் இடத்திலே கூடி வரும்படியாக செய்தார். கர்த்தர் சாமுவேலோடு இருக்கின்றார் என்று ஜனங்கள் அறிந்திருந்தார்கள். இஸ்ரவேல் புத்திரர் மிஸ்பாவிலே கூடிவந்ததைப் பெலிஸ்தர் கேள்விப்பட்டபோது, பெலிஸ்தரின் அதிபதிகள் இஸ்ரவேலுக்கு விரோதமாக எதிர்த்து வந்தார்கள் அதை இஸ்ரவேல் புத்திரர் கேட்டு, பெலிஸ்தரினிமித்தம் பயப்பட்டு, சாமுவேலை நோக்கி: நம்முடைய தேவனாகிய கர்த்தர் எங்களைப் பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிக்கும்படிக்கு, எங்களுக்காக அவரை நோக்கி ஓயாமல் வேண்டிக்கொள்ளும் என்றார்கள்.

அப்பொழுது சாமுவேல் கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்தி, இஸ்ரவேலுக்காகக் கர்த்தரை நோக்கி வேண்டிக்கொண்டான் கர்த்தர் அவனுக்கு மறுமொழி அருளிச்செய்தார். அன்றைய தினத்திலே, கர்த்தர் மகா பெரிய இடிமுழக்கங்களைப் பெலிஸ்தர்மேல் அந்நாளிலே முழங்கப்பண்ணி, அவர்களைக் கலங்கடித்ததினால், அவர்கள் இஸ்ரவேலுக்கு முன்பாகப் பட்டு விழுந்தார்கள்.

பலர் கர்த்தருக்கென்று பலி கொடுத்திருப்பார்கள் ஆனால், சாமுவேல் கர்த்தருக்கென்று பலி கொடுத்து ஜெபிக்கும் போது கர்த்தர் சாமுவேலின் ஜெபத்தை கேட்டார். அது எப்படி நடந்தது? இதன் இரகசியம் என்ன? ஆட்டிக்குட்டியை பலி கொடுத்தபடியால் கர்த்தர் உடனடியாக செவி கொடுத்தாரா? அல்லது ஒரு ஆட்டுக் கடாவை கொடுத்ததால் அவர் அதில் பிரியமாயிருப்பாரா? அல்லது மறி ஆடொன்றை பலி செலுத்தும்போது அவர் பதில் கொடுக்கின்றாரா? சாமுவேல் எந்த இடத்தில் பலி கொடுக்கும் போது, தேவன் அதை ஏற்றுக் கொண்டு பதில் கொடுக்கின்றவராக இருந்தார். அதனுடைய இரகசியம் என்ன? அவர் பலி கொடுத்த முறைகள் வித்தியாசமாக இருந்ததா? அவர் விறகுகளை அடுக்கிய விதம் வேறுபட்டிருந்ததா? அல்லது அவர் பேசிய வார்த்தைகள் வேறுவிதமாக இருந்ததா? இப்படியாக இந்த உலகத்தைச் சார்ந்தவர்கள்,

தேவனுடைய காரியங்களை, தங்களுக்கெட்டிய அறிவின் படி, வெளித் தோற்றங்களை ஆராய்ந்து பார்க்கின்றார்கள். ஆனால் தேவனுடைய காரியங்களை நாங்கள் ஆராய்ந்து அறிய வேண்டுமென்றால், தேவனுடைய வார்த்தையின்படி அந்த காரியங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

இன்றும் மனிதர்கள் வெளித் தோற்றங்களின்படி தேவனுடைய காரியங்களை ஆராய்ந்து, தாங்கள் காண்கின்ற முறைமைகளை பின்பற்றுகின்றவர்களாயிருக்கின்றார்கள். ஆனால் முக்கியமாக அம்சத்தை தவற விட்டுவிடுகின்றார்கள். எடுத்துக்காட்டாக, திருமணம் செய்ய இருக்கும் ஒரு ஆணும் பெண்ணும், திருமண நாளைக் குறித்து அதிக கவனமெடுப்பார்கள். எவ்விதமாக அலங்கரிக்கப்பட வேண்டும். எந்த நாளிலே திருமணம் நடக்க வேண்டும். யாரையெல்லாம் கொண்டாட்டதிற்கு வரவேற்க வேண்டும். திருமண நாளன்று நிகழ்ச்சிகள் ஒழுங்காயும், கிரமமாயும், அழகாகவும் நடத்தப்பட வேண்டும் என்று இவைகளிலே அதிக கவனத்தை செலுத்துகின்றார்கள். ஆனால் திருமணத்தின் நோக்கம் என்ன? இருவரும் ஐக்கியமாக வாழ்வதற்கு என்ன செய்ய வேண்டும்? என்ற முக்கிய அம்சங்களைக் குறித்து அதிக கவனமெடுப்பதில்லை.

தேவனுக்கு உகந்த பலி எது என்பதைக் குறித்து தேவனுடைய வார்த்தை தெளிவாக எடுத்துக் கூறுகின்றது. ஐக்கியமாக வாழ்வதெப்படி என்பதற்குரிய வழியை தேவனுடைய வார்த்தை தெளிவாக கூறுகின்றது. ஆனால் மனிதர்களுக்கோ தேவ வார்த்தைகளுக்கு கீழ்படிய மனதில்லை. ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப்பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத்தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது. சாமுவேல் பலி கொடுத்த போது கர்த்தர் உடனடியாக பதில் கொடுத்தார். ஏனெனில் அவர் ஒரு காரியத்தை தெளிவாக அறிந்திருந்தார். கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப்பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம் என்பதை தன் வாழ்க்கையில் உறுதியாக பற்றிக் கொண்டிருந்தார்.

நம் தேவன் நம்மிடத்தில் விரும்புகின்ற காரியம் என்ன? நாம் சமாதானமான வாழ்க்கை வாழ வேண்டும், அழிவிலிருந்து விலக்கப்பட்டு பரிசுத்த வாழ்க்கை வாழ வேண்டும் என்பதையே விரும்புகின்றார். அதை எப்படி அடைந்து கொள்வது? நீங்கள் மனம்பொருந்திச் செவிகொடுத்தால், தேசத்தின் நன்மையைப் புசிப்பீர்கள்.

[இந்த தேவ செய்தியின் முழுமையான ஒலிப்பதிவை பின்வரும்
இணையத் தளத்தில் (**INTERNET WEBSITE** இல்)
தமிழ் ஆங்கில மொழிகளில் கேட்கலாம். https://gtachurch.ca/im]

# உங்களுக்குச் சமாதானம்

ஒரு தேசத்தை அரசாண்டு வந்த ராஜாவானவன், தன் தேசத்திலுள்ள குடிகளைபார்க்கும்படிக்கு ஒரு ஊருக்குள்போயிருந்தான். அங்கு அவன் சென்று கொண்டிருக்கும் போது, ஒரு ஏழை விதவையானவள் தன் குடும் பத்தின் நாளாந்த பிழைப்பிற்காக படும் பாடுகளையும், செங்கற்கள் சுடும் இடத்திலே பல மனிதர்கள் மத்தியிலே அவள் படும் பிரயாச த்தையும் கண்ட போது. அவன் அவளை அழைத்து, "இன் றோடு உன் கஷ்டங்கள் முடிந்து விட்டது, நீ வசிப்பதற்கு வீடும், நீயும் உன் பிள்ளைகளும் பிழைப்பதற்குரிய வச திகள் யாவும் இன்று உனக்கு செய் யப்படும்" என்று கூறினான். அந்த ராஜாவின் வாக்கின்படி அவளுக்கு செய்யப்பட்டது. அந்த ராஜா சாதா ரண மனிதனாக இருந்த போதும் அவனுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தின்படியே, அவன் உரைத்த வார்த்தைகள் நிறைவேறிற்று. மனிதனுடைய வார்த்தையின் வல்லமை அப்படியாக இருந்தால், வல்ல மையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தை யும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரரா யிருக்கிறவரும், சகலத்தையும் ஆளும் ராஜாதி ராஜாவாகிய இயேசு கிறிஸ்துவின் வார்த்தையின் வல்லமையை சிந்தித்துப் பாருங்கள். அவர் சொல்ல ஆகும். அவர் கட்டளையிட நிற்கும். மரணத்தை வென்று பாதா ளத்தை ஜெயங்கொண்ட ஆண்டவராகிய இயேசு, தம் சீஷர் முன்னி லையிலே வந்து "உங்களுக்குச் சமாதானம்" என்றார். அவர் விருதா வாய் பேசுவதில்லை. ஜீவனுள்ள அவருடைய வார்த்தையின்படியே அன்று அவருடைய சீஷர்களை ஆட்கொண்ட தேவ சமாதானமானது, இன்று எங்களுக்குரியதாக இருக்கின்றது. ஒரு வேளை அதிகாரத்தி லுள்ள மனிதர்கள், அழிந்து போகும் இந்த உலக ஐசுவரியங்களை மற் றவர்களுக்கு கொடுக்க முடியும்;தங்கள் அதிகாரத்திற்குட்பட்டவைகளை செய்ய முடியும்,ஆனால் எந்த மனிதனாலும் மனச்சமாதானத்தை கொடு க்க முடியாது. நித்திய சமாதானத்தை கொடுக்கும் ஆண்டவர் இயேசு -வின் வார்த்தையை விசுவாசியுங்கள். அவருடைய வாக்குத்தத்தங் களை அனுதினமும் அறிக்கையிடுங்கள். பரிசுத்த வேதாகமத்திலுள்ள அந்த வல்லமையுள்ள வார்த்தைகள் உங்கள் வாழக்கையில் கிரியை செய்ய இடங்கொடுங்கள். தேசசமாதானம் உங்கள் உள்ளங்களையும் இல்லங்களையும் ஆட்கொள்ளக்கடவதாக.

**மத்தேயு 28:18**

**ஆண்டவர் இயேசு சொன்னார்: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.**

**ஜெபம்**: சமாதானத்தின் தேவனே, என்னுடைய வாழ்க்கையை குழப்பும் சூழ்நிலைகளைவிட உம்முடைய வாரத்தையானது மிகவும் வல்லமையு ள்ளது. அதன்படி உம்முடைய சமாதானம் என மனதை ஆட்கொள்வதாக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நீ விசுவாசித்தபடியே ஆகக்கடவது

ஆண்டவராகிய இயேசுவின் வார்த்தையின் வல்லமை கடந்த நாளோடு கடந்து போய்விட்டதா? இன்றைய சூழ்நிலைகள் உங்கள் மனதை மேற்கொண்டுவிடுகின்றதா? மனக் கவலைகள் உங்களை வாட்டுகின் றதா? உலகத்தில் உங்களுக்கு உபத் திரவம் உண்டு, ஆனாலும் திடன் கொள்ளுங்கள்நான் உலகத்தை ஜெயி த்தேன் என்று கூறிய ஆண்டவர் இயேசு உங்களோடு என்றென்றை க்கும் இருக்கின்றார். ஒரு சமயம், ஆண்டவர் இயேசு கப்பர்நகூமில் பிரவேசித்தபோது, ரோம பட்டாளத் தைச் சேர்ந்த நூற்றுக்கு அதிபதி ஒருவன் அவரிடம் வந்தான். அவன் தேவனை அறியாத புறஜாதியனாக இருந்தான். அவன் இயேசுவை நோக்கி: ஆண்டவரே! என் வேலை க்காரன் வீட்டிலே திமிர்வாதமாய்க் கிடந்து கொடிய வேதனைப்ப டுகிறான் என்று அவரை வேண்டிக் கொண்டான். அதற்கு இயேசு: நான் வந்து அவனைச் சொஸ்தமாக்கு வேன் என்றார். நூற்றுக்கு அதிபதி பிரதியுத்தரமாக: ஆண்டவரே! நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல. ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான். நான் அதிகாரத்துக்குக் கீழ்ப்ப ட்டவனாயிருந்தும், எனக்குக் கீழ்ப்பட்டிருக்கிற சேவகருமுண்டு நான் ஒருவனைப் போவென்றால் போகிறான், மற்றொருவனை வாவென்றால் வருகிறான், என் வேலைக்காரனை, இதைச் செய் என்றால் செய்கிறான் என்றான். அதாவது, சொற்ப அதிகாரமுள்ள தன் வார்த்தைக்கு இவ்வளவு வல்லமையிருந்தால், ஆண்டவர் இயேசுவின் வார்த்தைக்கு எவ்வளவு வல்லமையுண்டு என்பதை தன் மனதிலே அவன் விசுவா சித்து, அவன் தன் வாயினாலே அறிக்கையிட்டான். நான் ஒரு பாவியா கிய மனுஷன், பரிசுத்தராகிய நீர் என்னுடைய வீட்டிற்கு வர நான் எம்மாத்திரம் என்று தன்னைத் தாழ்த்தினான். இயேசு அவனுடைய விசுவாசத்தை கண்டு ஆச்சரியப்பட்டார். பின்பு இயேசு நூற்றுக்கு அதிபதியை நோக்கி: நீ போகலாம், நீ விசுவாசித்தபடியே உனக்கு ஆகக்கடவது என்றார். அந்த நாழிகையிலே அவன் வேலைக்காரன் சொஸ்தமானான். பிரியமானவர்களே, ஆண்டவர் இயேசு ஒருவரே மெய்த் தேவனும் அன்புள்ள தெய்வமுமாயிரு க்கின்றார். உங்களுக்காக தன் உயிரையே தியாகம் செய்த மீட்பரவர். இன்று நீங்கள் உங்கள் உள்ளத்தில் விசுவாசித்து, உங்கள் வாயினால் அறிக்கையிடுங்கள். உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகும்.

**மத்தேயு 8:13**

**நீ போகலாம், நீ விசுவா சித்தபடியே உனக்கு ஆக க்கடவது என்றார்.**

**ஜெபம்**: என் நிலையை நன்றாக அறிந்த அன்புள்ள பிதாவே, மனதை வருத்தும் போராட்டங்களினால் நான் அழிழ்ந்து போய்விடாதாபடிக்கு, உம்முடைய வார்த்தையின் வல்லமையினால் என்னை உயிர்பித்தரு ள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# உங்கள் தேவை என்ன?

ஒரு பட்டணத்திலே வாழ்ந்து வந்த ஐசுவரியமுள்ள மனிதனுக்கு ஒரு மகன் இருந்தான். தன் மகனை அவன் அதிகமாக நேசித்து வந்ததால் அவனுக்கு தேவையான யாவற்றையும் குறித்த நேரத்திலே செய்து வந்தான். அவனுடைய மகனானவன், தன் வாலிப பருவத்தை அடைந்ததும், தன்னுடைய பிறந்த தின பரிசாக மோட்டார் சைக்கிள்(Motor Bike) ஒன்றை வாங்கித் தரும்படி கேட்டுக் கொண்டான். பரவசம் நிறைந்த வாலிப பருவத்திலே, பட்டணத்து நெடுஞ்சாலைகளிலே தன் நண்பர்களோடு கூட்டமாக ஓட்டிச் செல்வது பெரும் ஆபத்தானது என்பதை தகப்பனானவர் அறிந்திருந்தார். மோட்டார் சைக்கிளை வாங்கி கொடுப்பது தகப்பனானவருக்கு ஒரு அற்பமான விஷயமாக இருந்த போதிலும், தன் மகனை அதிகமாக நேசித்ததால், அவன் அதை அவனுக்கு வாங்கி கொடுக்க மறுத்தார். அதனால், அந்த மகனானவன் மிகவும் கோபம் கொண்டவனாய், "எனக்கு வேறு ஒரு பரிசுப் பொருளும் தேவையில்லை, என் பிறந்த நாளிற்கு விழாவும் தேவையில்லை" என்று தன் தகப்பனானவரை நோக்கி கடுமையான வார்த்தைகளைக் கூறினான். காலங்கள் கடந்த சென்று அவன் பெரியவனான போது, அவன் தகப்பனார், அவனை நோக்கி: நீ இப்போது அந்த மோட்டார் சைக்கிளை வாங்கிக் கொள் என்று கூறினார். மகனானவன்: அப்பா, அது அப்போது என்னுடைய தேவை அல்ல என்று இப்போது நான் அறிந்து கொண்டேன். நான் பேசிய கடுமையான வார்த்தைகளை குறித்து மனம் வருந்துகின்றேன் என்று கூறினான். ஆம் பிரியமானவர்களே, நாமும் வளர்ந்தவர்களாக இருக்கின்ற போதிலும் அறியாத பருவங்கள் வாழ்விலே வருவதுண்டு. நம்மை நேசிக்கின்ற பரம பிதாவிடம் நாம் அநேக காரிங்களைக் கேட்கின்றோம். சில வேளைகளிலே, நாம் நினைத்தது நடக்க வேண்டும் என்று பிடிவாதமுள்ளவர்களாக இருக்கின்றோம். ஏன் தேவன் என்னுடைய வேண்டுதல்களுக்கு பதில் தரவில்லை என்று அந்த வாலிபனைப் போல நம்முடைய பிதாவாகிய தேவனோடு நொந்து கொள்கின்றோம். ஆனால் காலங்கள் கடந்து செல்லும் போது, நம்முடைய பரம பிதா எவ்வளவு அழகாகவும் நேர்த்தியாகவும் நம்மை நடத்திச் செல்கின்றார் என்பதை உணர்ந்து கொள்கின்றோம். பிரியமானவர்களே, உங்களுடைய தேவை இன்னதென்பதை அறிந்த தேவனிடம், அவருடைய சித்தம் உங்கள் வாழ்வில் நிறைவேற இடங் கொடுங்கள்.

**மத்தேயு 6:8**

**உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக்கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார்.**

**ஜெபம்**: காலங்களை அறிந்த தேவனே, என் வாழ்வின் தேவை என்ன என்பதை அறிந்து ஏற்ற நேரத்தில் யாவற்றையும் செய்து முடிக்கின்ற உம்முடைய வழிநடத்துதலுக்காக நன்றி செலுத்துகின்றேன். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# உங்கள் வெளிச்சம் பிரகாசிக்கக்கடவது

நாம் ஆராதிக்கின்ற தேவன், அவர் இரக்கங்களின் பிதா, அவர் கிருபை என்றென்றுமுள்ளது. ஒடுக்கப்படுகிற யாவருக்கும், கர்த்தர் நீதியையும் நியாயத்தையும் செய்கிறார். அவர் நம்முடைய பாவங்களுக்குத்தக்க தாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத்தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார். பூமிக்கு வானம் எவ்வளவு உயர மாயிருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள்மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது. ஒருவரும் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு தம்முடைய குமாரனை நமக்காக அனுப்பினார். இப்படியாக நம்மைக் காண்பவரும், பரிசுத்தமுள்ளவரும், சத்திய முள்ளவரும், நம்மை எப்போதும் அன்பு செய்கின்றவருமான பிதாவாகிய தேவனின் குணாதியங்களை கூறி அவரை ஆராதிக்கின்றோம். அது மட்டுமல்லாமல், அவர் நம்முடைய வாழ்வில் செய்த உபகாரங்களை எடுத்துரைத்து ஜனங்கள் மத்தியிலே சாட்சி பகர்கின்றோம். நாம் தேவனை ஆராதிப்பதும், அவருடைய கிரியைகளை எடுத்துரைப்பதும் நமக்கு நன்மையும் அவசியமுமானது. அந்த நன்மையும், சாட்சியும் நம்முடைய வாழ்வின் கிரியைகள் வழியாக உறுதிப்படுத்தப்பட வேண்டும். பிரியமானவர்களே, சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தரை, அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் நாம் பெற்றிருக்கின்றோம். வானமும் பூமியும் படைத்த பிதாவாகிய தேவனுக்கு நாம் பிள்ளைகளாக இருந்தால், அவருடைய தெய்வீக சுபாவங்கள் நம்முடைய வாழ்விலே வெளிப்படுத்தப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக, மற்றவர்கள் எங்களுக்கு எதிராக செய்யும் குற்றங்களை நாம் பொறுத்து, நம்முடைய பிதாவைப் போல, இரக்கத்தில் செல்வந்தவர்களாக இருந்து, அவர்களை மன்னித்துவிட வேண்டும். நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள். இந்த உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள். இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தேவனுடைய மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும் பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார். அந்த ஒளியானது இந்த பாவ இருள் சூழ்ந்த உலகத்திலே மற்றய மனிதர்களுக்கு வெளிச்சமாக இருக்க வேண்டும். இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது. இவ்வண்ணமாக அவருடைய நாமம் நம் சாட்சியின் வாழ்க்கை வழியாக ஜனங்கள் மத்தியிலே மகிமை அடைய வேண்டும்.

**மத்தேயு 5:16**

**உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.**

**ஜெபம்**: நன்மைகளின் ஊற்றாகிய தேவனே, நீர் என்னுடைய பரம தகப்பன் என்பதை நம்முடைய வாழ்வின் நற்கிரியைகள் வழியாக நாம் வெளிப்படுத்தும்படிக்கு உணர்வுள்ள வாழ்க்கை வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# உடைத்து உருமாற்றும் தேவன்

ஒரு மனிதனானவனுடைய கையிலே ஒரு சிறிய நோவு ஏற்பட்டிருந்த படியினால், அவன் வைத்தியரை சந்திக்க சென்றிருந்தான். அவர் அவனுடைய கையை சற்று சோதனை செய்த பின்பு, இந்த நோவை கை மருந்துகளால் மாற்றிவிடலாம். அத்தோடு, உன் வேலை செய்யும் முறைகளை சற்று மாற்றிவிட வேண்டும் என்று கூறினார். வைத்தியர் கூறிய படி செய்து வந்த அந்த மனிதனானவன், ஒரு சில மாதங்களுக்கு பின்பு அதை பாராமுகமாக விட்டுவிட்டான். வருடங்கள் கடந்து சென்ற பின்பு, அவன் கையை அசைக்க முடியாதபடிக்கு அவனுக்கு நோவு ஏற்பட்டதால், அவன் துரிதமாக வைத்தியரை காணும்படி சென்றிருந்தான். அவனுடைய நிலையை ஆராய்ந்து பார்த்த வைத்தியர், அவனை நோக்கி: இதை இனி மருந்துகளாலும் பயிற்சிகளாலும் குணமாக்க முடியாது. எனவே, நீ சீக்கிரமாக அறுவை சிகிச்சை செய்து கொள்ள வேண்டும் என்று திட்டமாக கூறினார். ஆம் பிரியமான சகோதர சகோதரிகளே, நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கை யிலும் இதற்கொத்ததான சூழ்நிலைகள் ஏற்படுவதுண்டு. எடுத்துக்காட்டாக, ஒரு வாலிபனுடைய மனதிலே தன் வாழ்க்கையைக் குறித்த பெருமை கொஞ்சம் குடிகொண்டிருந்தது. பலர் அதைக் குறித்து அவனிடம் அவ்வப்போது கூறிய போதும், அவன் பாராமுகமாக இருந்துவிட்டான். வருடங்கள் கடந்து சென்றதும், அந்த பெருமையானது நோயைப் போல பரவி, அவன் மனக் கண்களை குருடாக்கி விட்டது. அழிவுக்கு முன்னானது அகந்தை, விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை என்று பரிசுத்த வேதாகமம் கூறவதைப் போல, அவன் வாழ்விலே ஏற்பட்ட மிகப் பயங்கரமான விழுகையின் வழியாக அவன் தன் பெருமையை உணர்ந்து கொண்டான். அவன் தீமையின் வழியிலே நடந்த போதும், இரக்கமுள்ள தேவன், அவன் வாழ்வில் ஏற்பட்ட தீமையை நன்மையாக மாற்றினார். எனவே, நம் வாழ்வில் ஏற்படும் மாம்சத்தின் எண்ணங்களாகிய கோபம், வன்மம், கசப்பு, பகை, விரோதம், பிரிவினைகள் போன்றவற்றை ஆரம்பத்திலேயே மேற்கொண்டுவிடுவது நல்லது. அதை நாம் உணராது வாழும் போது, குயவன் கையில்களி மண்ணைப் போல, நம்முடைய கர்த்தர் நமது வாழ்வின் அனுபவங்கள் வழியாக நம்மை உடைத்து உருமாற்றுகின்றவராக இருக்கின்றார்.

**ஏசாயா 64:8**

இப்பொழுதும் கர்த்தாவே, நீர் எங்களுடைய பிதா, நாங்கள் களிமண் நீர் எங்களை உருவாக்குகிறவர், நாங்கள் அனைவரும் உமது கரத்தின் கிரியை.

**ஜெபம்**: தெய்வீக சாயல் அடையும்படி அழைத்த தேவனே, என் வாழ்விலுள்ள மாம்சத்தின் கிரியைகளை ஆரம்பத்திலேயே விட்டுவிட ஞானத்தின் ஆவியை தந்து என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# மனதிலே யுத்தங்கள்

ஒரு குறிப்பிட்ட தேசமொன்றிலே சில மாதங்களாக யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதனால் அந்த தேசத்திலே நாளாந்த நடடிவடிக்கைகள் ஸ்தம்பிதமாகிக் கொண்டிருந்தது. அந்த தேசத்திலே ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடியினால் பல மக்கள் அடிப்படைத் தேவைகளை சந்திப்பதற்குக்கூட மிகவும் கஷ்டப்பட்டார்கள். மாதங்கள் செல்லச் செல்ல, அந்த தேசத்திலே களவு, கொள்ளை, கொலை மற்றும் சமுதாய சீர்குலைவுகள் அதிகமாயிற்று. மக்கள் தங்கள் நாளாந்த பிழைப்பிற்காக எதையும் செய்துவிடலாம் என்ற மனநிலையுடையவர்களாக மாறிக் கொண்டிருந்தார்கள். இவை யுத்தத்தினால் ஏற்படும் பக்கவிளைவுகளாக இருக்கின்றது. நம்முடைய வாழ்க்கையிலும் போராட்டங்களும் யுத்தங்களும் ஏற்படுவதுண்டு. இவைகளினால் மனிதர்களுடைய மனம் பெரும் குழப்பமடைந்து விடுகின்றது. வாழ்விலே நிம்மதி அற்றுப் போய்விடுகின்றது. இதனால் கொள்கை, கௌரவம் என்று வாழ்ந்தவர்கள்கூட நிலை தவறி தங்கள் புத்திக்கெட்டியபடி தீர்மானங்களை எடுத்துக் கொள்கின்றார்கள். மன குழப்பங்கள் மத்தியிலே எப்படி ஒரு மனிதனானவன் சிந்தித்து நல்ல தீர்மானங்களை எடுக்க முடியும்? இதனால் தேசத்திலே யுத்தத்தினால் உண்டான சீர்குலைவுகளைப் போல, மனப்போராட்டங்கள் நிறைந்த மனிதனுடைய வாழ்விலும் பலவிதமான சீர்குலைவுகள் ஏற்பட்டு விடுகின்றது. இப்படிப்பட்ட சூழ்நிலைகள் மனிதர்களுடைய வாழ்விலே ஏற்படும் போது, பல தவறான காரியங்களை தங்கள் உள்ளங்களிலும் இல்லங்களிலும் இவர்கள் நுழைய விட்டுவிடுகின்றார்கள். பிரியமானவர்களே, இந்த உலகிலே வாழும்வரை நம்முடைய வாழ்விலே உபத்திரவங்களை நாம் தவிர்த்துக் கொள்ள முடியாது. மனிதர்களுடைய வாழ்விலே மனக் கவலைகளும் பாரங்களும் ஏற்பவதுண்டு. அப்படியாக ஏற்படும் நாளிலே உங்கள் வாழ்வில் நோவுகளை நீங்கள் அதிகரித்துக் கொள்வதற்கு முன்பாக சிலுவையண்டைக்கு திரும்புங்கள். ஆண்டவராகிய இயேசு உங்களை விசாரிக்கின்றவரானபடியால், உங்கள் கவலைகள், மனப்பாரங்கள், போராட்டங்கள் எல்லாவற்றையும் அவர்மேல் வைத்து விடுங்கள். கிருபை நிறைந்த ஆண்டவர் இயேசு உங்களை சீர்ப்படுத்தி ஸ்திரப்படுத்தி பலப்படுத்தி நடத்துவாராக.

**1 பேதுரு 5:10**

**சகல கிருபையும் பொருந்திய தேவன்தாமே கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற உங்களைச்சீர்ப்படுத்தி. ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவாராக**

**ஜெபம்**: சகல கிருபையும் பொருந்திய தேவனே, வாழ்விலே ஏற்படும் உபத்திரவங்களை கண்டு பின்னிட்டு என் சொந்த தீர்மானங்களை எடுத்துக் கொள்ளாதபடிக்கு நீர் உம்முடைய வழியிலே என்னை நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# உங்கள் இலக்கை நோக்கி...

நிஜமாகவே நான் எந்தக் குற்றமும் செய்யவில்லை. இந்த விஷயத்திலே நான் முற்றிலும் நிரபராதி. என்னிடம் சாட்சிகள் உண்டு. இதற்கு இப்போது நீதி செய்யப்பட வேண்டும் என்று ஒரு மனிதனானவன் கூறிக் கொண்டான். இப்படிப்பட்ட சூழ்நிலைகள் உங்கள் வாழ்வில் ஏற்பட்டிருக்கலாம். இத்தகைய சூழ்நிலை, வீட்டிலோ, வசிக்கும் அயலிலோ, தொழிற்சாலையிலோ, பாடசாலையிலோ அல்லது சபையிலோ ஏற்படலாம். அந்த வேளைகளிலே, உண்மையிலே குற்றம் ஏதும் செய்யாத மனிதர்கள் "இப்போது நீதி நடப்பிக்கப்பட வேண்டும்" என்று பல குழப்பங்களை ஏற்படுத்தி விடுகின்றார்கள். ஆண்டவராகிய இயேசுவை கைது செய்த மதத்தலைவர்கள், பாவமறியாத பரிசுத்தரும், நன்மையேயன்றி தீமை செய்யாதவருமாகிய ஆண்டவர் இயேசுவின்மேல் குற்றம்பிடிக்கும்படியாக வகை தேடினார்கள். எனவே பிரதான ஆசாரியரும் மூப்பர் சங்கத்தார் யாவரும் இயேசுவைக் கொலை செய்யும்படி அவருக்கு விரோதமாய்ப் பொய்ச்சாட்சி தேடினார்கள். ஒருவரும் அகப்படவில்லை. அநேகர் வந்து பொய்ச்சாட்சி சொல்லியும் அவர்கள் சாட்சி ஒவ்வவில்லை. அந்த வேளையிலும் ஆண்டவராகிய இயேசு மயிர் கத்திரிக்கக் கொண்டு செல்லும் செம்மறி ஆட்டைப் போல மௌனமாக இருந்தார். தம்மை அனுப்பிய தம்முடைய பரமபிதாவின் சித்தத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதே அவருடைய நோக்கமாக இருந்தது. தன்மேல் குற்றம் சுமத்துபவர்களுடைய பாவங்களையும் தன்மேல் ஏற்றுக் கொண்டார். பிரியமான சகோதர சகோதரிகளே, உங்களை அழைத்தவர் யார்? எதற்காக அழைத்தார்? உங்களுடைய இலக்கு என்ன? யாருடைய சித்தத்தை இந்தப் பூமியிலே நிறைவேற்றப் போகின்றீர்கள்? என்ற கேள்விகளை உங்கள் மனதிலே கேட்டுக் கொள்ளுங்கள். நீதியின் பாதையிலே வாழும் போது, எதிர்ப்பும் ஏளனங்களும் ஏற்படும். அவை உங்கள் வீட்டிலிருந்து கூட வரலாம். அதனால் உங்கள் பரலோக பிரயாணம் ஸ்தம்பிதமடையாதபடிக்கு அவைகளில் தரித்து நிற்காமல் உங்கள் பரம இலக்கை நோக்கி முன்னேறுங்கள். நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு ஆண்டவர் இயேசுவை நோக்கிப் பார்த்து அவரையே நினைத்துக் கொள்ளுங்கள்.

**எபிரெயர் 12:3**

**தமக்குவிரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்**

**ஜெபம்**: நித்திய வாழ்வுக்கென்று அழைத்த தேவனே, இந்த உலகத்தினால் உண்டாகும் குழப்பங்களினால் நான் பெற்ற பரம அழைப்பின் இலக்கை மறந்து போய்விடாதபடிக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நீங்கள் யாரைச் சார்ந்தவர்கள்?

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த ஜனங்கள், தங்களுக்கென்று ஒரு ராஜாவை ஏற்படுத்த வேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டார்கள். ஆனால் ராஜா யார் என்பதைக் குறித்த தீர்மானத்திலே அந்த ஊரார் இரண்டாக பிரிந்து விட்டார்கள். ஒரு சாரார், நீதியையும் நியாயத்தையும் குறித்த உணர்வுள்ள ஒருவனையும், இன்னுமொரு சாரார் நீதியைக் குறித்த எந்த சிந்தனையுமேயில்லாத ஒருவனையும் சார்ந்து கொண்டார்கள். இவ்வண்ணமாகவே இந்த உலகத்திலுள்ள மனிதர்கள் யாவருமே இருவரின் வருகைக்காக தங்களை ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். இரட்சகர் இயேசு வழியாக உண்டான மீட்பை பெற்றுக் கொண்டவர்கள் நீதியின் ராஜாதி ராஜாவாகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்காக காத்திருக்கின்றார்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன் ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன் என்று கூறிய ஆண்டவர் இயேசு மறுபடியும் வந்து தம்முடையவர்களை தம்மோடு சேர்த்துக் கொள்வார். ஆனால் ஆண்டவர் இயேசுவை ஏற்றுக் கொள்ளாத அவபக்தியுள்ளவர்கள் அந்திக்கிறிஸ்துவின் வருகையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் தங்கள் தெரிவின் முடிவானது நித்திய காரிருள் என்பதை உணராதவர்களாக தங்கள் மனதை கடினப்படுத்திக் கொள்கின்றார்கள். இப்படிப்பட்டவர்களை குறித்து விமர்சிப்பதிலும், அவர்களின் முடிவையும் குறித்து அதிகதிகமாக பேசுவதும் நாம் தரித்து நின்று விடாதபடிக்கு, முதலாவதாக நாம் நம்முடைய தூய வாழ்வு இவர்களால் கறைபடாதபடிக்கு காத்துக் கொள்ள வேண்டும். இரண்டாவதாக, ஒருவனும் கெட்டுப் போவது தேவனுடைய சித்தமல்ல. எனவே அவர்களின் மனக்குருட்டாட்டம் நீங்கிப் போகும்படியாயும், மனப்பிரகாசமுள்ள மனக்கண்களை அவர்களும் பெற்றுக் கொள்ளும்படியாயும் நாம் அப்படிப்பட்டவர்களுக்காகவும் தேவனை வேண்டிக் கொள்ள வேண்டும். கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாக நாம் ஆண்டவர் இயேசுவுக்கு முன் நிற்கும்படிக்கு ஆயத்தப்படுவோமாக.

**யோவான் 14:3**

**ஆண்டவர் இயேசு: நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்.**

**ஜெபம்:** அன்பின் பரலோக தந்தையே, இந்த உலகத்திலும் அதனுடையவைகளிடத்திலும் நான் அன்புகூராதபடிக்கு, பரம பந்தையப் பொருளின்மேல் நோக்கமாக இருக்கும்படிக்கு என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# இருதயத்தை பராமரிப்போம்

ஒரு மனிதனானவன் தன் வீட்டின் பின்புறத்திலே இருக்கும் சிறிய தோட்டத்தை மிகவும் அழகாக பராமரித்து வந்தான். குறிப்பிட்ட ஆண்டு ஒன்றிலே அவன் வேறே அலுவலாக தூர பிரயாணமொன்றை மேற்கொள்ள வேண்டியதாக இருந்தது. பல நாட்களுக்கு பின் வீடு திரும்பிய அவன், தன் தோட்டத்திலே காஞ்சொறிகளும், முற்புதர்களும் முளைத்திருப்பதையும், அந்த களைகள் பெரிதாக முளைத்து அவன் தோட்டத்திலிருந்த அழகான பூமரங்களை மேற்கொண்டதையும் கண்டு, இவ்வளவு சீக்கிரமாய் இந்த தோட்டம் பாழாய் போய்விட்டதே என்று ஆச்சரியப்பட்டான். பிரியமானவர்களே, ஆதியிலே ஆதாம் ஏவாள் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படியாமல், பிசாசினுடைய வார்த்தைக்கு கீழ்படிந்ததால் பூமியானது அவர்கள் நிமித்தம் சாபத்திற்குள்ளானது. அது இயற்கையாகவே "முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும்" நிலமாக மாறிவிட்டது. அந்த நிலத்திலிருந்து பலன் பெற வேண்டுமாயின் அந்த நிலமானது பண்படுத்தி பராமரிக்கப்பட வேண்டும். பயிர் செய்வோம் என்று தீர்மானம் செய்த விவசாயியானவன், விதை விதைக்க முன்பு, நிலமானது அந்த விதையை முளைப்பிப்பதற்கு ஏற்புடையதாக இருக்கின்றதா என்று பார்த்து அதைப் பண்படுத்துவான். விதை விதைத்தபின்பு அவன் அதை அப்படியே விட்டுவிடுவதில்லை. பலனை காணும் நாள்வரைக்கும் அவன் தன் பயிர்களை பராமரித்து வருவான். அதுபோலவே இந்த உலகத்திலே வாழும் நாம், நம்முடைய இருதயமாகிய நிலத்தை பண்படுத்தி, பயனுள்ளதாக பராமரித்து வரவேண்டும். நம் இருதயத்தை தன்பாட்டிற்கே நாம் விட்டுவிடுவோமாக இருந்தால், நாம் ஆலயத்திற்கு சென்றாலும், தேவனுடைய வார்த்தையை கேட்டாலும், வேத வசனங்களை கேட்டாலும், முற்களும் குருக்களுமாகிய உலகக்கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் தேவ வசனத்தை நெருக்கிப்போடுகிறதினால், நம் வாழ்க்கையானது பலனற்றதாக மாறி விடும். இப்படிப்பட்ட வாழ்க்கையினாலேயே மனிதர்கள் தேவன் கொடுத்த மனச் சமாதானத்தை உணர முடியாமல், நிம்மதியற்றவர்களாக அலைந்து திரிகின்றார்கள். தன் தோட்டத்தை கவனியாமற்போன அந்த மனிதனைப் போல நாம் கரிசனையற்றவர்களாக வாழாதபடிக்கு, நம் இருதயமாகிய நிலத்தை தேவனுடைய வார்த்தையின்படி பண்படுத்தி, பராமரித்து காத்துக் கொள்வோமாக.

**மத்தேயு 13:8**

சில விதையோ நல்ல நிலத்தில் விழுந்து, சிலது நூறாகவும், சிலது அறுபதாகவும், சிலது முப்பதாகவும் பலன் தந்தது.

**ஜெபம்**: ஆசீர்வதிக்கும் தேவனே, என் வாழ்க்கையிலே நீர் கொடுத்திருக்கும் ஆசீர்வாதங்களை நான் காத்துக் கொள்ளும்படிக்கு எச்சரிக்கையுள்ளவனாக இருக்க நீர் எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# வானத்திற்குரிய மேனியின் மகிமை

தன் சின்ன வயதிலிருந்தே பல உபத்திரவங்கள், பொருளாதார நெருக்கடிகள் மத்தியிலே வாழ்ந்து வந்த வாலிபனொருவனுக்கு, அபிவிருத்தியடைந்த மேற்கத்தைய நாட்டிற்கு செல்வதற்கு வாய்ப்பு கிடைத்தது. அந்த சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் அவன் அந்த செழிப்புள்ள தேசத்திற்கு சென்றான். சில ஆண்டுகளுக்கு பின்பு, அந்த தேசத்தின் குடியுரிமையை பெற்றுக் கொள்ளும்படிக்கான தகுதி அவனுக்கு கொடுக்கப்பட்டிருந்தது. அந்த உடன்படிக்கையின்படி அவன் தான் விட்டு வந்த தேசத்தின் குடியுரிமையை துறக்க வேண்டியதாக இருந்தது. அதாவது, செழிப்புள்ள தேசத்தின் உரிமைகள் யாவையும் பெற்றுக் கொள்ளும்படிக்காய் அவன்விட்டு வந்த தேசத்தின் உரிமைகளை அவன் விட்டுவிட வேண்டியதாக இருந்தது. அது போலவே நாம் பரலோக குடியுரிமையை பெற்றுக் கொள்ள வேண்டுமாயின், இந்த பூமி நம்முடைய நிரந்தர குடியிருப்பு அல்ல என்பதை உணர்ந்து, இந்த உலத்தினால் உண்டாகும் நிரந்தரமற்றதான அதன் உரிமைகளை துறந்து விட வேண்டும். ஒரு வேளை இந்த உலகத்திலே பல நாடுகளின் குடியுரிமையை பணம் கொடுத்து வாங்கிவிடலாம். ஆனால் நாம் உலகத்தின் போக்கில் வாழ்ந்து கொண்டு, பரலோகத்தின் குடியுரிமையை எப்படிப்பட்ட உலக செல்வத்தினாலும் வாங்கிக் கொள்ள முடியாது. பிரியமானவர்களே, உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள் ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. வானத்துக்குரிய மேனிகளுமுண்டு, பூமிக்குரிய மேனிகளுமுண்டு வானத்துக்குரிய மேனிகளுடைய மகிமையும் வேறே, பூமிக்குரிய மேனிகளுடைய மகிமையும் வேறே. பூமிக்குரிய மேனிகளுடைய மகிமையை விட்டுவிட மனதில்லாதவன், பரலோகத்தின் மேனிகளுடைய மகிமையைத் தரித்துக் கொள்ள முடியாது. நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம் (பிலிப்பியர் 3:20). ஆகவே, அழிவில்லாதவைகளை தரித்துக் கொள்ளும்படிக்கு அழிவிற்குரிய இந்த உலகத்தின் மேன்மைகளை விட்டுவிடுங்கள். இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.

**1 கொரிந்தியர் 15:40**

வானத்துக்குரிய மேனிகளுடைய மகிமையும் வேறே, பூமிக்குரிய மேனிகளுடைய மகிமையும் வேறே

**ஜெபம்**: பரலோக மகிமைக்காக அழைத்த தேவனே, மண்ணானவனுக்குரிய சாயலை களைந்து வானவருடைய மகிமையின் சாயலை நான் அடையும்படிக்கு நீர் என்னை அனுதினமும் நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# இழந்து போனவைகள்

ஐயா பெரியவரே, ஏறத்தாழ இருபது ஆண்டுகளாக தேவனை சேவித்து அவருக்காக பணி செய்து வருகின்றேன். எத்தனையோ உபத்திரவங் கள், அவமானங்கள், துன்பங்கள் போன்றவற்றை சந்தித்து வருகின் றேன். கிறிஸ்துவை சேவிப்பதினால் பல காரியங்களை இந்த உலகத் திலே இழந்து போனேன். இன்னும் எதையெல்லாம் நான் இழந்து போக வேண்டும்? என்று ஒரு மனிதனாவன் வயதான ஒரு ஊழியரைக் கேட் டுக் கொண்டான். அதற்கு அவர் மறுமொழியாக மகனே, இந்த உல கத்திலே எவையெல்லாம் அழிந்து போய்விடுமோ, அவையெல்லாவற் றையும் இழந்துபோக நீ ஆயத்த மாக இரு. நான் இந்த உலகத்தை விட்டுகடந்து செல்லும்நாட்கள் நெரு ங்கிக் கொண்டிருக்கின்றது. அந்நாளிலே என் உயிர் இந்த சரீரத்தை விட்டு கடந்து போகும், இந்த சரீரமும் மண்ணோடு மண்ணாக அழிந்து போகும். அக்கரையிலே நான் அழியாத நித்திய ஜீவனை பெற்றுக் கொள்வேன். இந்த பூமியிலே நாம் கிறிஸ்துவுக்காக இழந்துபோன யா வற்றிற்குமுரிய பலனை ஆண்டவர் இயேசு நமக்குத் தருவார். எனவே சோர்ந்து போகாதே. உன்னிடத்திலிருக்கின்ற உல கத்திற்குரியவை களை நீ காத்துக் கொள்ளவிரும்பினால், நீ நித்திய ஜீவனை இழந்து போவாய் எனவே அழியாத நித்திய ஜீவனை விட்டு விடாமல் பற்றிக் கொள், மிகுதியானவைகள் யாவும் ஒழிந்து போகும் என்றார். ஆம் பிரி யமான சகோதர சகோதரிகளே, நம்முடைய ஆவிக்குரிய வாழ்விலும் நாம் நாளாந்தம் பல சவால்களையும், நெருக்கங்களையும், துன்பங்க ளையும் சந்திக்கின்றோம். சில வேளைகளிலே மனிதர்கள் காரணமின்றி நம்மை பகைக்கின்றார்கள். நன்மையை பெற்றவர்கள், நன்மைக்கு பதி லாக தீமையை செய்கின்றார்கள். பலவிதமான எதிர்ப்பு, ஏளனம், அவ மானம் நிந்தையை சகிக்க நேரிடுகின்றது. இதனால் பலர் பாதி வழி யிலே சோர்ந்து போய்விடுகின்றார்கள். தன் ஜீவனை இரட்சிக்க விரும் புகிறவன் அதை இழந்துபோவான் என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் கண்டடைவான். மனுஷன் உலகம் முழுவ தையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தி னால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்ன த்தைக் கொடுப்பான்? மனுஷகுமாரன் தம்முடைய பிதாவின் மகிமை பொருந்தினவராய்த் தம்முடைய தூதரோடுங்கூட வருவார் அப்பொழுது, அவனவன் கிரியைக்குத்தக்கதாக அவனவனுக்குப் அவர் பலனளிப்பார்.

**மத்தேயு 16:27**

**அவனவன் கிரியைக்குத்தக் கதாக அவனவனுக்குப் பல னளிப்பார்.**

**ஜெபம்**: அவனவனுடைய கிரியைகளுக்குத் தக்க பலனளிக்கும் தேவனே, சோர்ந்து போகாமல் நற்கிரியைகளைச் செய்து அழியாமையை தேடும் படிக்கு எனக்கு உற்சாகத்தின் ஆவியைத் தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

திங்கள் | ஆடி 12

📖 மாலை வாசகம் – தீத்து 3:9

# பக்திவிருத்திக்கு ஏதுவானவைகள்

தம்பி, நீ எப்போது பேசும் போதும் மற்றவர்களுடைய வாழ்க்கையிலுள்ள குறைகளையே பேசுவதும், உன்னை சூழ நடக்கின்ற காரியங்களைக் குறித்து முறுமுறுக்கின்றவனுமாக இருக்கின்றாய். உன் கண்கள் எப்போதும் குறைவுகளிலே தரித்து நிற்கின்றதை காண்கின்றேன். இது உன் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு நல்லதல்ல. உன் வாழ்விலே நீ தேவனோடு கொண்டுள்ள உறவை நீயே சுயபரிசீலனை செய்து கொள்ள வேண்டுமென்று ஒரு போதகர் ஒரு மனிதனுக்கு அறிவுரை கூறினார். ஒரு வேளை இப்படிப்பட்ட மனிதர் களை நீங்கள் உங்கள் வாழ்விலே சந்தித்திருக்கலாம். அவர்களைப் பற்றிய விமர்சனம் இன்றைய தியானத்திற்குரியதல்ல. ஆனால் நாம் நம்முடைய வாழ்க்கையின் சம்பாஷணைகளை தேவ வார்த்தையின் வெளிச்சத்திலே ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஆகாத சம்பாஷைகள் நல்லொழுக்கத்தைக் கெடுக்கும். வம்பும் புத்தியீனமும் தகாதவைகள். குறைவுகள் இருக்கும் இடத்தில் நியமிக்கப்பட்டவர்கள் தேவ ஆலோசனைகளை கூறுவது நல்லது. ஆனால் நாம் மற்றவர்களுடன் பேசும் போது, நம்முடைய எல்லா சம்பாஷணைகளிலும் நாம் மற்றவர்களுடைய வாழ்க்கையிலுள்ள குறைவுகளைக் குறித்தே ஆராய்வதும், அவைகளை குறித்தே நொந்து கொள்கின்றவர்களுமாக இருந்தால், நாம் ஆன்மீக நோய் கொண்டவர்களாக மாறிவிடுவோம். நாம் கிறிஸ்துவை அறியுமுன்பு, பரலோக ராஜ்யத்திற்கு பகைஞர்களாக இருந்தோம். நமக்கும் பரலோகத்திற்கும் இடையில் பெரிதான பிளவு இருந்தது. மீட்பராகிய இயேசு, சமாதான காரணராகி, அந்தப் பிளவை நீக்கி, நம்மை பரலோகத்தோடு ஒப்புரவாக்கினார். அதன் வழியாய் தேவ சமாதானத்தை நாம் பெற்றுக் கொண்டோம். சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தரை அப்பா பிதாவே என்று கூப்பிடும் தகுதியை அடைந்தோம். நாம் தேவனுடைய குமாரர்களாகவும் குமாரத்திகளாகவும் ஏற்படுத்தப்பட்டோம். நாம் தேவனுடைய குமாரர்களும் குமாரத்திகளுமாக இருந்தால், மற்றவர்களுடைய குறைகள் நம்முடைய வாழ்க்கையை ஆளுகை செய்யாதபடிக்கு தேவ சமாதானமே நம்மை ஆளுகை செய்ய வேண்டும். எனவே விசுவாசத்தினால் விளங்கும் தெய்வீக பக்திவிருத்திக்கு ஏதுவானவற்றை பேசுங்கள். குறைகள் நிறைவாகும்படி சேர்ந்து ஜெபியுங்கள். சமாதனம் செய்யும் தேவ புத்திரராக இருங்கள்.

**எபேசியர் 4:29**

**பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவனுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்.**

**ஜெபம்**: தெய்வீக சமாதானத்தை எனக்குத் தந்த தேவனே, விசுவாசத்தினால் விளங்கும் பக்திவிருத்திக்கு ஏற்ற வைகளையே நான் கேட்கின்றவர்களுக்கு பிரயோஜனமுண்டாக பேசும்படி என்னை உணர்வுள்ளவனா(ளா)க்கும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# உறுதியான ஐக்கியம்

இரண்டு மனிதர்கள் பங்காளிகளாக சேர்ந்து ஒரு வியாபார ஸ்தாபன மொன்றை ஆரம்பித்தார்கள். அவர்கள் இருவரும் ஸ்தாபனத்திலே அனுதினமும் அதிக நேரத்தை ஒன்றாக செலவழித்து வந்ததார்கள். அதுமட்டுமல்லாமல், இருவரின் குடும்பங்களும் அவ்வப்போது ஒன்றுகூடல்களில் கலந்து கொண்டதால் ஒருவரோடொருவர் மிகவும் ஐக்கியப்பட்டிருந்தார்கள். அவர்களுடைய ஸ்தாபனத்திலே வியாபாரம் நன்றாக வளர்ந்து வந்ததும், அந்தக் குடும்பங்களுக்கிடையிலான உறவும் ஸ்திரப்பட்டிருந்தது. சில ஆண்டுகள் சென்றதும், அவர்களுடைய வியாபாரத்திலே சில பின்னடைவுகள் ஏற்பட்டதால், பங்காளிகளுக்கிடையிலே கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டது. நாளடைவில் அவர்களுக்கிடையிலான நல்லுறவு உடைந்து போய்விட்டது. மேற்கூறிய இந்த சம்பவத்திலே அவர்களுடைய ஐக்கியத்தின் மையப் பொருள் எது? அவர்களுடைய வியாபாரமே அவர்களின் ஐக்கியத்தின் காரணமாக இருந்தது. வியாபாரம் ஸ்தம்பிதமாகியதும் அவர்கள் ஐக்கியமும் அப்படியே களைந்து போய்விட்டது. இன்று சபை ஐக்கியங்களில்கூட மனிதர்கள் ஒருவரோடொருவர் ஐக்கியமாக இருப்பதற்கு தங்களுக்கிடையிலான பொதுவான விருப்பம் ஒன்றை தேடுகின்றார்கள் எடுத்துக்காட்டாக, “அவருக்கும் எனக்கும் உதைபந்தாட்டம் நல்லாக பிடிக்கும். இவர்களுக்கும் எங்களுக்கும் உல்லாசப் பயணங்கள் செல்வதில் விருப்பம் உண்டு. எங்களுக்கும் அவர்களுக்கும் இசையிலே ஆர்வம் உண்டு.” என்று அவைகளையே தங்கள் ஐக்கியத்தின் மையப் பொருளாக வைத்துக் கொள்வதால், அவைகளிலே மாற்றங்கள் உண்டாகும் போது, அவர்களின் ஐக்கியமும் மாறிப் போய்விடுகின்றது. நம்முடைய ஐக்கியம் இந்த உலக பொருளிலோ, உலகம் சார்ந்த நடவடிக்கைகளிலோ அல்லது மனிதர்களுடைய விருப்பு வெறுப்பின் அடிப்படையிலோ இருக்கக்கூடாது. இந்த உலகமும் அதிலுள்ளவைகளும் அழிந்து போகும். எனவே நாம் அவைகளினாலே நிலையான ஐக்கியத்தை அடைய முடியாது. எங்கள் ஒவ்வொருவருடைய ஐக்கியமானது, பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்க வேண்டும். அந்த ஐக்கியமானது நிலையானது. அவரே நாம் ஒருவரோடொருவர் கொண்டுள்ள ஐக்கியத்தின் அடித்தளமாக இருக்க வேண்டும். தேவன் மாறாதவராக இருப்பதால் அந்த ஐக்கியமும் மாறிப் போகாது.

**1 யோவான் 1:3**

எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது.

**ஜெபம்**: என்றும் மாறாத தேவனே, இந்த உலகமும் அதிலுள்ளவைகளும் மாறிப்போகும், மாறாத உம்மிலே நான் நிலைகொண்டர்களாக இருக்கும்படிக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# மனதார நன்றியைத் தெரிவியுங்கள்

ஒரு மனிதனானவனின் வாழ்க்கையிலே ஏற்பட்ட பெரிதான இக்கட்டான சூழ்நிலையிலே அவனுடைய அயலவனொருவன் தானாகவே முன் வந்து எந்த நிபந்தனையுமில்லாமல் உதவி செய்தான். அந்த மனிதனுக்கும் அவன் குடும்பத்தாருக்கும் அந்த அயலவன் பெரும் ஆறுதலாக இருந்தான். உதவியைப் பெற்றவன் உடடினயான தன் அயலவனை சந்தித்து அவனுடைய உதாரத்துவத்தை பாராட்டி, அவன் தங்களுக்கு செய்த உதவியை தாங்கள் ஒருபோதும் மறந்து போவதில்லை என்று அவனுக்கு வெளிப்படையாக நன்றியின் வார்த்தைகளை கூறினார்கள். பல ஆண்டுகள்கடந்து சென்றதும், அந்த மனிதனும் அந்தக் குடும்பத்தினரும் அந்த அயலவனுக்குநன்றியாக இருக்க வேண்டிய ஒரு சந்தரப்பம் ஏற்பட்டது. ஆனால் அந்த வேளையிலே அவர்கள் அந்த அயலவன் தங்களுக்கு செய்த உதவியை மறந்து போனானார்கள். பிரியமான சகோதர சகோதரிகளே, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ மனிதர்களிடம் நாம் நன்மைகளை பெற்றிருக்கின்றோம். பெற்ற மாத்திரத்திலே நன்றியின் வார்த்தைகளை கூறி, வாழ்த்து மடல்களை அனுப்புவது நல்லது. ஆனால் உண்மையாகவே நன்றியறிதலுள்ளவர்களாக இருக்க வேண்டுமாயின் அந்த நன்றியானது எனக்கு கடமையுண்டு, கடமையை தீர்க்க வேண்டும் என்று இருக்கக்கூடாது. மாறாக, குறித்த காலத்திலே நம்முடைய மனமார்ந்த செயல்களினாலே அந்த நன்றியானது காண்பிக்கப்பட வேண்டும். கண்கண்ட அயலவனுக்கு நன்றியறிதலுள்ளவனாக இருக்காதவன் எப்படி கண்காணாத தேவனுக்கு நன்றியறிதலுள்ளவனாக இருப்பான்? "எனக்காக அடிக்கப்பட்டீர், எத்தனை நன்மைகள் எனக்கு செய்தீர்? தேவன் அருளிய சொல்லி முடியா ஈவுக்கு ஸ்தோத்திரம், எண்ணிடலங்கா ஸ்தோத்திரம்" என்று அருமையான பாடல்களை பாடுகின்றோம். அந்த நன்றியானது நம்முடைய வாழ்வின் கிரியைகள் வழியாக மற்றவர்களுக்கு வெளிப்படுத்தப்பட வேண்டும். பசியாக, தாகமாக, அந்நியராக, வஸ்திரமில்லாதவர்களாக, வியாதியாக, காவலிலிலே வைக்கப்பட்டவர்களாக இருக்கின்றவர்கள் பலர். அவர்களுக்கு எதை செய்கின்றீர்களோ, அதை நீங்கள் ஆண்டவர் இயேசுவுக்கே செய்கின்றீர்கள். அவ்வாறாக உங்கள் நன்றியைத் தெரிவியுங்கள்.

**மத்தேயு 25:40**

**மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கேசெய்தீர்கள்என்று மெய்யாகவேஉங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார்.**

**ஜெபம்**: எண்ணிலடங்காத நன்மைகளை என் ஆத்துமாவிற்குச் செய்த தேவனே, இந்த உலகிலே பல உபத்திரவங்களின் மத்தியிலே வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு மனதார உதவி செய்யும் உள்ளத்தைத் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

**வியாழன் | ஆடி 15** | மாலை வாசகம் – பிரசங்கி 2:1 – 11

# மனப்பூர்வமாய் மன்னியுங்கள்

ஒரு ஊரிலே இருந்த ராஜாவிடம் அவனுடைய ஊழிக்காரர்களில் ஒரு வன், பதினாயிரம் தாலந்துகளை கடன்பட்டிருந்தான். அவன் தான் பட்ட கடனை தீர்க்க அவனுக்கு முடியாமற் போனதினால், அந்த ஊழிய க்காரன் தாழவிழுந்து, வணங்கி: ஆண்டவனே! என்னிடத்தில் பொறுமை யாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்றான். அந்த ஊழியக்காரனு டைய ஆண்டவன் மனதிரங்கி, அவனை விடுதலைபண்ணி, கட னையும் அவனுக்கு மன்னித்துவி ட்டான். அப்படியிருக்க, அந்த ஊழியக்காரன் புறப்பட்டுப்போகை யில், தன்னிடத்தில் நூறு வெள்ளி ப்பணம் கடன்பட்டிருந்தவனாகிய தன் உடன்வேலைக்காரரில் ஒருவ னைக் கண்டு, அவனைப்பிடித்து, தொண்டையை நெரித்து: நீ பட்ட கடனை எனக்கு கொடுத்துத் தீர்க்கவேண்டும் என்றான். அப்பொழுது அவனுடைய உடன்வேலைக்காரன் அவன் காலிலே விழுந்து: என்னிட த்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்று, அவனை வேண்டிக்கொண்டான். அவனோ சம்மதி யாமல், போய், அவன் பட்ட கடனைக் கொடுத்துத் தீர்க்குமளவும் அவ னைக் காவலில் போடுவித்தான். அதை கேள்விப்பட்ட அந்த ஊரின் ராஜா அந்த நன்றியற்ற பொல்லாத ஊழியக்காரனை பிடித்து, நான் உனக்கு இரங்கினதுபோல, நீயும் உன் உடன்வேலைக்காரனுக்கு இரங் கவேண்டாமோ என்று சொல்லி, அவனுடைய ஆண்டவன் கோபமடை ந்து, அவன் பட்ட கடனையெல்லாம் தனக்குக் கொடுத்துத் தீர்க்குமள வும் உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தான். பிரியமான வர்களே, நாமும் பரலோகத்திற்கு பகைஞர்ளாகவும், நித்திய ஆக்கி னைக்கு பங்காளிகளாகவும்இருந்த வேளையிலே, ஆண்டவராகிய இயேசு தாமே நம்முடைய பாவங்களுக்குரிய பரிகாரத்தைத் தான் செலுத்தி, நம்மை நித்திய வாழ்விற்கு பங்காளிகளாக மாற்றினார். இப்படிப்பட்ட இரக்கத்தை நாம் பெற்றிருக்கும் போது, நம்முடைய உடன்சகோதரரில் ஒருவன் நமக்கெதிராக செய்யும் தப்பிதங்களை மன்னியாதிருந்தால், நாமும் அந்த நன்றியற்ற பொல்லாத ஊழியனைப் போல இருப்போம். எனவே, தேவனுக்கு உங்கள் நன்றியை தெரிவிக்கும்படிக்கு உங்க ளுக்கு எதிராக குற்றம் செய்தவர்களை மன்னித்து விடுங்கள்.

**மத்தேயு 18:35**

**நீங்களும் அவனவன் தன் சகோதரன் செய்த தப்பிதங் களை மனப்பூர்வமாய் மன் னியாமற்போனால், என் பரம பிதாவும் உங்களுக்கு இப்ப டியே செய்வார் என்றார்.**

**ஜெபம்**: இரக்கத்தில் ஐசுவரியம் உள்ள பிதாவே, உம்முடைய பிள்ளை களாகிய நாங்கள் நீர் நம்மேல் எங்கள்மேல் காட்டிய இரக்கத்தை மற்ற வர்களிடம் காட்டும்படிக்கு உணர்வுள்ள இருதயத்தை எமக்கு தந்தருள் வீராக. இரட்ச கர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தாழ்மையும் கீழ்படிவும்

ஒரு ஸ்தாபனத்திலே சில ஆண்டுகளாக வேலை செய்து வந்த தொழிலாளியை, அந்த ஸ்தாபனத்தில் புதிதாக சேர்ந்த இயக்குனர் கடுமையாக நடத்தி வந்தார். சில கிழமைகளுக்கு பின்னர், அந்தத் தொழிலாளி கோபமடைந்ததால் அந்த ஸ்தாபனத்தை விட்டு தான் விலகப் போகின்றேன் என்று தன்னுடன் வேலை பார்த்த ஒரு அனுபவ மிக்க சக தொழிலாளியிடம் கூறினான். அதற்கு அந்த சக தொழிலாளி: நண்பனே, பிரச்சனைகள் வரும் போது அவைகளை விட்டு ஓடுவது மட்டுமே அதற்கு முடிவு அல்ல. ஒருவேளை அந்த இயக்குனருக்கு உன்னை குறித்து தப்பான அபிப்பிரயாயம் இருக்கலாம். இன்னும் கொஞ்ச கால அவகாசத்தை அவருக்கு கொடுத்து, உன்னுடைய நிலைமையையும் ஆராய்ந்து பார். ஒரு வேளை நீ இதை மேற்கொண்டு விடுவாய். நீ இன்னுமொரு ஸ்தாபனத்திற்கு செல்லும் போது, அங்கே உனக்கு செங்கம்பள வரவேற்பு கிடைக்கும் என்று நினைக்கின்றாயா? என்று அறிவுரை கூறினார். அந்த அறிவுரையை கேட்டு அந்தத் தொழிலாளி, தன் காரியங்களை ஆராய்ந்து தன் வேலை முறைமைகளில் சில சிறிய மாற்றங்களை உண்டு பண்ணினான். ஆதைக் கண்டு கொண்ட இயக்குனர், அவனை அழைத்து அவனோடு பேசி, அவனை ஊக்குவித்தார். அவனுக்கும் இயக்குனருக்குமிடையில் நல் நம்பிக்கை வளர ஆரம்பித்தது. பிரியமானவர்களே, இன்றைய உலகிலே பல மனிதர்கள் அதிகதிகமாக தங்கள் வாழ்க்கையின் பிரச்சனைகளின் முடிவை துரிதமாக எடுத்துக் கொள்கின்றார்கள். பாடசாலையில் ஆசிரியர் ஒருவரோடு பிரச்சனையாக இருந்தால், பாடசாலையை மாற்றி விடுவோம். வீட்டு சொந்தக்காரரோடு பிரச்சனையாக இருந்தால், இன்னுமொரு வீட்டை வாடகைக்கு எடுப்போம். மனைவியோடு பிரச்சனையென்றால் சிலர் திருமண ஒப்பந்தத்தை உடைத்து மறுமணம் செய்து விடுகின்றார்கள். சபையிலே பிரச்சனையென்றால் இன்னுமொரு சபைக்கு சென்று விடுவோம் என்று வாழ்ந்து வருகின்றார்கள். நாமோ, முதலாவதாக நம்முடைய வாழ்வை ஆராய்ந்து பார்க்க வேண்டும். நல்லுறவை வளர்ப்பதற்கு மனமாற்றம் அவசியமானது. கீழ்படிவும் தாழ்மையும் கடுமையான மனங்களும் உருகிக் போய்விடும். மெதுவான பிரதியுத்தரம் உக்கிர த்தை மாற்றும். எனவே பிரச்சனைகள் தலைதூக்கும் போது உங்கள் வாழ்க்கையில் சிறிய மாறுதல்களைக் காண்பியுங்கள்.

**1 பேதுரு 2:18**

**வேலைக்காரரே, அதிக பயத்துடனே உங்கள் எஜமான்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்**

**ஜெபம்**: எல்லாவற்றையும் அறிந்த தேவனே, பிரச்சனைகளை விட்டு ஓடுவது மட்டுமே பிரச்சனைகளுக்குரிய ஒரே தீர்வு என்று எண்ணாமல், உம்முடைய வார்த்தையின்படி சூழ்நிலைகளை மேற்கொள்ள கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நல் நடக்கையின் சாட்சி

சம உரிமை, மனித உரிமை என்று குரல் எழுப்பி இன்று மனிதர்கள் நாடுகளிலே பல சட்டங்களை அமுல்படுத்தியிருக்கின்றார்கள். சட்ட ரீதியாக நான் சமமானவன். நாட்டின் சட்டப்படி யாரும் போதகராக வருவதற்கு தடையில்லை. மனித உரிமையின்படி நான் யாரையும் திருமணம் செய்து கொள்ளலாம். நாட்டின் சட்டப்படி நான் திருமணம் செய்யாமலும் வாழ்ந்து விடலாம் என்று மனிதர்கள் தங்கள் மனவிருப்பங்களையே சட்டங்களாக மாற்றுவதால், தங்கள் வாழ்க்கை நீதியுள்ளது என்று மனத்திருப்தியடைகின்றார்கள். சட்டப்படி ஒருவர் போதகராகலாம் ஆனால் அந்தப் போதகர் ஆண்டவர் இயேசுவின் அங்கீகாரத்தை பெறாவிட்டால், அந்த போதகருடைய ஆண்டவர் யார்? சட்டப்படி கணவன் என்னை கனப்படுத்த வேண்டும் அல்லது சட்டப்படி மனைவி என்னை கனப்படுத்த வேண்டும் என்று உரிமை கோருவதால், கணவன் மனைவிக்கிடையில் நல்லுறவு வளர்ந்து விடுமோ? சமாதானமான வாழ்வுக்குரிய வழியை தேவனுடைய வார்த்தை நமக்கு கற்றுக் கொடுக்கின்றது. வேலைக்காரர்களே நல்லவர்களுக்கும் சாந்தகுணமுள்ளவர்களுக்கும் மாத்திரம் அல்ல, முரட்டுக்குணமுள்ள எஜமான்களுக்கும் கீழ்ப்படிந்திருங்கள். அந்தப்படி மனைவிகளே, உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள். வாலிபரே மூப்பர்களுக்கு கீழ்படிந்திருங்கள். ஜனங்களே, மேலான அதிகாரங்களுக்கு கீழ்படிந்திருங்கள். சபையிலே மட்டுமல்ல, தேசத்திலே, வேலையிடங்களிலே, பாடசாலைகளிலே, வீட்டிலே நீங்கள் உங்கள் கீழ்படிவைக் காண்பிப்பதால் உங்கள் வாழ்க்கையில் நன்மையையும், உங்களை கடுமையாக நடுத்துகின்றவர்களின் வாழ்க்கையில் நல் மாற்றங்களையும் உண்டு பண்ணலாம். நாம் நம்முடைய வாழ்க்கையிலே கீழ்படிவைக் காண்பிப்பதினால், மற்றவர்கள் செய்வதெல்லாம் சரி என்று பொருளல்ல. நாம் கீழ்படிவைக் காண்பிக்கும் போது, முதலாவதாக நாம் கர்த்தருடைய வார்த்தை நம்மில் நிறை வேற, நம்மைத் நாமே தாழ்த்துகின்றோம். அப்பொழுது தேவனுடைய சித்தம் நம் வாழ்விலே நிறைவேற இடங் கொடுக்கின்றோம். இதனால் எங்களை கடுமையாக நடுத்துகின்றவர்களும் எங்கள் நல் நடக்கையின் சாட்சியை ஒரு நாள் எடுத்துரைப்பார்கள். இப்படியாக பிதாவாகிய தேவனுடைய நாமம் எங்கள் வழியாக மகிமைப்படும்.

**1 பேதுரு 2:15**

நீங்கள் நன்மைசெய்கிறதினாலே புத்தியீன மனுஷருடைய அறியாமையை அடக்குவது தேவனுடைய சித்தமாயிருக்கிறது.

**ஜெபம்:** மனத்தாழ்மையை கற்றுக் கொடுக்கும் தேவனே, கசப்பான அனுபவங்களை கடந்து செல்லும் போதும், நான் உம்முடைய வார்த்தை என்னில் நிறைவேறும்படி என்னைத் தாழ்த்த என்னை உணர்வுள்ளவனா(ளா)க்கும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# அனுதின பயிற்சி

ஒரு தேசத்தின் இராணுவ படையிலே சேர்ந்து சேவை செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன், படையிலே இணைந்த இளைஞனொருவன், தன் பயிற்சியின் நாட்களை முடித்து உத்தியோகபூர்வமாக படையிலே சேர்க்கப்பட்டான். தனக்குரிய பயிற்சி முடிந்து விட்டதுதானே இனி சற்று இளைப்பாறலாம் என்று எண்ணியிருந்தான். ஆனால் அடுத்த நாளிலிருந்தே அவன் காலையிலே நேரத்தோடு எழுந்து, ஒவ்வொரு நாளும் குறிப்பிடப்பட்ட பயிற்சிகளையும் வேலைகளையும் முடித்து, எப்போதும் உசார் நிலையிலே இருக்க வேண்டும் என்பதையும் அத்தோடு எந்நேரமும் உடற்பயிற்சி செய்து, சகல ஆயத்தத்துடனும் இருக்க வேண்டும் என்பதை அறிந்த போது அவன் மனச்சோர்வு அடைந்தான். பயிற்சி முடிந்து விட்டதுதானே, இனி ஒரு யுத்தம் வரும்வரை சும்மா இருப்போம் என்று படையில் சேவகம் பண்ண பதிந்து கொண்டவர்கள் இருக்க முடியுமா? பிரியமானவர்களே, நம்முடைய ஆவிக்குரிய வாழ்வும் இப்படியாகவே இருக்கின்றது.வேதாகம கல்லூரிக்குச் சென்று வேதத்தை கற்றுவிட்டேன் என்று ஒருவன் திருப்தியடைய முடியுமா? அல்லது பாவ அறிக்கை செய்தேன், ஞானஸ்நானத்திற்குக் கீழ்படிந்திருக்கின்றேன், தூய ஆவியின் அபிஷேகத்தை பெற்றிருக்கின்றேன் இனி இளைப்பாறலாம் என்று இருக்க முடியாது. நம்முடைய ஆண்டவராகிய இயேசு நினையாத நாளிகையிலே நம்மை கூட்டிச் செல்ல வருவார். எனவே நாம் மணவாளன் வருவார் என்று ஆயத்தமாக இருந்த புத்தியுள்ள கன்னிகைகளைப் போல, நம்முடைய ஆண்டவராகிய இயேசுவின் வருக்கைக்காக எப்போதுமே ஆயத்தமுள்ளவர்களாக இருக்க வேண்டும். நாம் ஆயத்தத்தமாவதை குழப்பும்படிக்கு, உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். எனவே நாம் அனுதினமும் தேவனோடுள்ள உறவிலே வளரும்படிக்கு கருத்துதோடு வேத வார்த்தைகளை தியானித்து, ஊக்கத்தோடு ஜெபம் செய்கின்றவர்களாக இருக்க வேண்டும். நான் பல ஆண்டுகள் ஆண்டவர் இயேசுவை அறிந்திருக்கின்றேன், எனக்கு எல்லாம் தெரியும், எனக்கு ஒரு பயிற்சியும் தேவையில்லை என்று இருப்பது ஒரு பின்மாற்றமான வாழ்க்கை. எனவே, தேவனை அறிகின்ற அறிவிலே வளரும்படி ஒவ்வொரு எதிரடையான சூழ்நிலையிலும் விசுவாசத்தில் உறுதியாயிருந்து, பிசாசானவனுக்கு எதிர்த்து நிற்கும்படிக்கு ஆயத்தமுள்ளவர்ளாக இருப்போம்.

**1 பேதுரு 5:8**

தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்

**ஜெபம்**: அன்பின் தேவனே, எல்லா சூழ்நிலைகளிலும் உம்முடைய வார்த்தையைக் கேட்டு, அதன்படி நடப்பதையே என் வாழ்வின் கருப்பொருளாக கொண்டிருக்கும்படி உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கிறிஸ்துவின் அடிச்சுவடுகள்

ஏன் நீங்கள் இன்னுமொருவருடைய தப்பிதங்களை சகித்துக் கொள்ள கூடாதிருக்கின்றீர்கள்? எனக்கெதிராக குற்றம் செய்தவன் தண்டனை பெற வேண்டும் என்று அவர்களது முடிவைக் காணும்படி அதிகமாக பிரயாசப் படுகின்றீர்கள். நீங்கள் கிறிஸ்துவின் சாயலை அடையும்படிக்கு நீங்கள் அழைப்பைப் பெற்றவர்கள் என்பதை அறியாதிருக்கின்றீர்களா? நம்மை அழைத்த ஆண்டவர் இயேசுவின் அன்பை மறந்து போய் விட்டீர்களா?கபாலஸ்தலம் என்று அர்த்தங் கொள்ளும் கொல்கொதா என்னும் இடத்துக்கு அவர்கள் வந்தபோது, ஆண்டவர் இயேசுவை சிலுவையிலே அறைந்தார்கள். அவருடைய வலது பக்கத்தில் ஒருவனும் அவருடைய இடது பக்கத்தில் ஒருவனுமாக இரண்டு குற்றவாளிகளை அவரோடே கூடச் சிலுவைகளில் அறையப்பட்டார்கள். அந்த இரண்டு குற்றவாளிகளும் தாங்கள் செய்த குற்றத்திற்குரிய தண்டனையை பெற்றிருந்தார்கள். ஆண்டவர் இயேசுவோ, எந்தப் பாவமும் செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை. அவர் மனிதகுலத்தின் பாவங்களுக்கான தண்டனையை தம்மேல் ஏற்றுக் கொண்டார். நம்முடைய பாவங்களுக்குரிய பரிகாரத்தை சிலுவையிலே செலுத்தினார். நாம் அந்தக் குற்றவாளிகளைப் போல பாவம் செய்து தண்டனையை அனுபவிப்பதால் பலன் என்ன? அவர் பாவஞ்செய்யவில்லை. நீங்கள் குற்றஞ்செய்து அடிக்கப்படும்போது பொறுமையோடே சகித்தால், அதினால் என்ன கீர்த்தியுண்டு? நீங்கள் நன்மைசெய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்கு முன்பாகப் பிரீதியாயிருக்கும். இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள் ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார். அவர் வையப்படும்போது பதில்வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிற பிதாவாகிய தேவனுக்கு தம்மை ஒப்புவித்தார். அதனாலே புதிதும் ஜீவனுமான பரலோக மார்க்கத்தை அவர் நமக்காக திறந்தார். நாமும் ஆண்டவர் இயேசுவின் சாயலிலே வளரும்படிக்கு பிதாவாகிய தேவனுடைய சித்தத்திற்கு நம்மை ஒப்புக் கொடுப்பபோம். நன்மை செய்து பாடனுபவிக்க நேரிட்டால் அதுவே மேன்மை என எண்ணிக் கொள்வோம்.

**1 பேதுரு 2:21**

நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்.

**ஜெபம்**: அன்பின் பரலோகப் பிதாவே, ஒவ்வொரு நாளும் நான் தேவ சாயலிலே வளரும்படிக்கு, கிறிஸ்துவில் இருந்த சிந்தை என்னில் வளரும்படிக்கு எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

| செவ்வாய் \| ஆடி 20 | 📖 மாலை வாசகம் – ரோமர் 12:17 |
|---|---|

# நீங்கள் ஆசீர்வாதத்தின் சுதந்திரர்கள்

எனக்குத் துரோகம் செய்த அவன் நல்லா இருப்பானா? என்று ஒரு சகோதரன், தன் அயலிலிருக்கும் ஒரு மனிதனின் மேல் கசந்து கொண்டான். இவ்வாறாக, சிலவேளைகளிலே மற்றவர்கள் நமக்கு துன்பங்களை விளைவிக்கும் போது, நாமும் அறிந்தோ அறியாமலோ சாபமான வார்த்தைகளை கூறிவிடுகின்றோம். ஒருவரும் கெட்டுப் போகமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கே ஆண்டவராகிய இயேசு இந்தப் பூமிக்கு வந்தார். (யோவான் 3:16) துன்மார்க்கமான வாழ்க்கை வாழ்க்கின்றவர்களும் அழிந்து போவது தேவனுடைய விருப்பம் அல்ல. அவர்கள் தங்கள் துன்மார்க்கத்தனத்திலிருந்து விடுதலையடைய வேண்டும் என்றே அவர் விரும்புகின்றார் (எசேக்கியா 18:21-23). ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். (2 பேதுரு 3:9). பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்று தம்மை துன்புறுத்துகின்றவர்களுக்காக ஆண்டவர் இயேசு சிலுவையில் தொங்கும் போது வேண்டிக் கொண்டார். (லூக்கா 23:34). எனவே உங்களை காரணமின்றி துன்பப்படுத்துகின்றவர்களைக்கூட சபித்துவிடாதிருங்கள். யாவரும் மனந்திரும்ப வேண்டும் என்று தேவன் சித்தமுள்ளவராயிருக்கின்றார். அவர்கள் தங்கள் அறியாமையிலே அழிந்து போகாதபடிக்கு, அவர்களை மன்னியுங்கள். நீங்கள் மற்றவர்களை சபிக்கும் போது அவர்களைகுறித்த கசப்பு உங்கள் இருதயங்களில் ஒட்டிக் கொண்டு வளர ஆரம்பிக்கும். நீங்களெல்லாரும் ஒருமனப்பட்டவர்களும், இரக்கமுள்ளவர்களும், சகோதர சிநேகமுள்ளவர்களும், மனஉருக்கமுள்ளவர்களும், இணக்கமுள்ளவர்களுமாயிருந்து, தீமைக்குத் தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல், அதற்குப் பதிலாக, நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து, ஆசீர்வதியுங்கள். ஜீவனை விரும்பி, நல்ல நாட்களைக் காணவேண்டுமென்றிருக்கிறவன் பொல்லாப்புக்குத் தன் நாவையும், கபடத்துக்குத் தன் உதடுகளையும் விலக்கிக்காத்து, பொல்லாப்பைவிட்டு நீங்கி, நன்மைசெய்து, சமாதானத்தைத் தேடி, அதைப் பின் தொடரக்கடவன்.

**1 பேதுரு 3:9**

**நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து, ஆசீர்வதியுங்கள்.**

**ஜெபம்**: நித்திய ஆசீர்வாதத்திற்காக அழைத்த தேவனே, நான் மட்டுமல்ல யாவரும் அந்த ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக் கொள்ளும்படிக்கு கல்லான இருதயங்கள் உணர்வுடையும்படி கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# குறைவுகளை தெரியப்படுத்துங்கள்

ஒரு ஓய்வுநாளில் ஆண்டவராகிய இயேசு ஜெப ஆலயத்தில் போதகம்பண்ணிக்கொண்டிருந்தார். அப்பொழுது பதினெட்டுவருஷமாய்ப் பலவீனப்படுத்தும் ஆவியைக்கொண்ட ஒரு ஸ்திரீ அங்கேயிருந்தாள். அவள் எவ்வளவும் நிமிரக்கூடாத கூனியாயிருந்தாள். இயேசு அவளைக் கண்டு, தம்மிடத்தில் அழைத்து: ஸ்திரீயே, உன் பலவீனத்தினின்று விடுதலையாக்கப்பட்டாய் என்று சொல்லி, அவள்மேல் தமது கைகளை வைத்தார் உடனே அவள் நிமிர்ந்து, தேவனை மகிமைப்படுத்தினாள். பிரிய மானவர்களே, ஒரு வேளை இந்த சம்பவத்திற்கு முன்பும் அந்த ஸ்திரி அநேக தடவைகள் ஆலயத்திற்கு சென்றிருக்கலாம் ஆனால் குறித்த நாள் வந்தபோது சுகமளிக்கும் தெய்வம் இயேசு அவளுக்கு சுகம் கொடுத்தார். இன்று உங்கள் சரீரத்திலும் ஏற்பட்டிருக்கும் வியாதிகளை குறித்து சோர்ந்து போய்விடாதிருங்கள். சில சமயங்களிலே, மனிதர்கள் தங்கள் குறைகள் நிறைவாகும்படி ஜெபிக்கின்றார்கள். ஆனால் நாட்கள் கடந்து செல்லும் போது, மனச் சோர்வடைந்து, மனக்கிலேசத்திலே மற்றவர்களோடு பேசும் போது, "வாழ்க்கை இப்படித்தான், இனி என்ன செய்வது, இனி இப்படியே வாழ பழகிக் கொள்ள வேண்டும்" என்று தாங்கள் ஜெபித்த தேவைகளுக்கு எதிரான, விசுவாசமற்ற வார்த்தைகளை அறிக்கையிடுகின்றார்கள். நீங்களோ அப்படியிராமல், விசுவாசத்திலே உறுதியாய் நிலைத்திருங்கள். உங்கள் சரீர குறைவுகளை மட்டுல்ல, உங்கள் ஆன்மீக பெலவீனங்களையும் பாராமுகமாக விட்டு விடாமல் அவைகளையும் ஆண்டவர் இயேசுவிடம் தெரியப் படுத்துங்கள். இயேசுவே உம்முடைய அன்புக்காக நன்றி என்று அனுதினமும் அறிக்கையிடுங்கள். இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். அவருடைய நாமம் அன்று மட்டுமல்ல என்றென்றும் வல்லமையுள்ளது. நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங்கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம். வார்த்தையை அனுப்பி குணமாக்கும் தேவன், உங்கள் குறைவுகளை கிறிஸ்து இயேசுவுக்குள் நிறைவாக்கி நடத்துவார்.

**எபிரெயர் 13:8**

இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்.

**ஜெபம்**: சுகம் தரும் தேவனே, ஆண்டுகள் கடந்து சென்றாலும் நான் உம்மேல் கொண்டுள்ள விசுவாசத்திலே தளர்ந்து போய்விடாதபடிக்கு என் குறைவுகளிலே நீரே நிறைவாக இருந்து என்னை வழிடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

வியாழன் | ஆடி 22

📖 மாலை வாசகம் – ரோமர் 8:15

# அவிசுவாசம் நீங்கும்படி செய்யும்

ஒரு சமயம் ஊமையான ஒரு ஆவி பிடித்த ஒருவனை அவன் தகப்பனானவன் ஆண்டவர் இயேசுவினிடத்தில் கொண்டு வந்தான். அவரைக் கண்டவுடனே, அந்த ஆவி அவனை அலைக்கழித்தது. அவன் தரையிலே விழுந்து, நுரைதள்ளிப் புரண்டான். அவர் அவனுடைய தகப்பனை நோக்கி: இது இவனுக்கு உண்டாகி எவ்வளவு காலமாயிற்று என்று கேட்டார். அதற்கு அவன்: சிறு வயது முதற்கொண்டே உண்டாயிருக்கிறது. இவனைக் கொல்லும்படிக்கு அது அநேகந்தரம் தீயிலும் தண்ணீரிலும் தள்ளிற்று, நீர் ஏதாகிலும் செய்யக்கூடுமானால், எங்கள் மேல் மனதிரங்கி, எங்களுக்கு உதவிசெய்ய வேண்டும் என்றான். இயேசு அவனை நோக்கி: நீ விசுவாசிக்கக்கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார். உடனே பிள்ளையின் தகப்பன்: விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும் என்று கண்ணீரோடே சத்தமிட்டுச் சொன்னான், இயேசு அந்த ஆவியை நோக்கி: ஊமையும் செவிடுமான ஆவியே, இவனை விட்டுப் புறப்பட்டுப்போ, இனி இவனுக்குள் போகாதே என்று நான் உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று அதை அதட்டினார். அப்பொழுது அது சத்தமிட்டு, அவனை மிகவும் அலைக்கழித்துப் புறப்பட்டுப் போயிற்று. அவன் செத்துப்போனான் என்று அநேகர் சொல்லத்தக்கதாகச் செத்தவன்போலக் கிடந்தான். இயேசு அவன் கையைப்பிடித்து, அவனைத் தூக்கினார் உடனே அவன் எழுந்திருந்தான். பிரியமானவர்களே, சில மனிதர்கள் தங்கள் முரட்டாட்டத்திலே, மனதைக் கடினப்படுத்தி, ஆண்டவர் இயேசுவின்மேல் விசுவாசம் வைக்காமல் இருக்கின்றார்கள். ஆனால் அந்தத் தகப்பனானவன் அப்படிப்பட்டவன் அல்ல. தன் மனதைத் திறந்து, ஆண்டவர் இயேசுவை நோக்கி தன் உண்மை நிலைலையை அவருக்கு அறிவித்தான். தன் அவிசுவாசம் நீங்கும்படி உதவி செய்யும் என்று கேட்டான். அதே பிரகாரமாக, நாமும் நம்மைத் தாழ்த்தி நம்முடைய உண்மை நிலைமையை மனதார நம்முடைய ஆண்டவர் இயேசுவுக்கு கூறும் போது, அவர்தாமே நமக்கு உதவி செய்கின்றவராயிருக்கின்றார். பல ஆண்டுகளாக வாதிக்கப்பட்ட அந்த மகனானவனுக்கு ஆண்டவர் இயேசு விடுதலையைக் கொடுத்தார். எனவே உண்மையுள்ள இருதயத்தோடு இயேசுவை நாடுங்கள்.

**மாற்கு 9:24**

**விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும் என்று கண்ணீரோடே சத்தமிட்டுச் சொன்னான்.**

**ஜெபம்:** விடுதலை தரும் தேவனே, என் வாழ்வின் பெலவீனங்களை நீர் அறிந்திருக்கின்றீர். உம்முடைய சமுகத்திலே நான் என்னைத் தாழ்த்தி ஒப்புக் கொடுக்கிறேன். நீர் என்னை விடுதலையாக்குவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# அக்கரைக்குப் போவோம் வாருங்கள்

ஒரு நாள் மாலை வேளையிலே, ஆண்டவராகிய இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: அக்கரைக்குப் போவோம் வாருங்கள் என்றார். அவர்கள் அக்கரையை நோக்கி படவை ஓட்டினார்கள். அப்பொழுது, பலத்த சுழல்காற்று உண்டாகி, படவு நிரம்பத்தக்கதாக, அலைகள் அதின்மேல் மோதிற்று. கப்பலின் பின்னணியத்தில் அவர் தலையணையை வைத்து நித்திரையாயிருந்தார். அவர்கள் அவரை எழுப்பி: போதகரே, நாங்கள் மடிந்துபோகிறது உமக்குக் கவலையில்லையா என்றார்கள். அவர் எழுந்து, காற்றை அதட்டி, கடலைப்பார்த்து: இரையாதே, அமைதலாயிரு என்றார். அப்பொழுது காற்று நின்றுபோய், மிகுந்த அமைதல் உண்டாயிற்று. அவர் அவர்களை நோக்கி: ஏன் இப்படிப் பயப்பட்டீர்கள்? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற்போயிற்று என்றார். அந்த நாள் முழுவதும் இயேசு படவிலிருந்தபடி கரையிலே நின்ற திரளான ஜனங்களுக்கு விதையாகிய தேவனுடைய வார்த்தையையும், நிலமாகிய மனிதர்களுடைய இருதயங்களையும், அது பலன் கொடுப்பதையும் குறித்து உவமைகள் வழியாக பேசி, பின்பு சீஷர்களுக்கு அவைகளை விவரித்து கூறி, மேலும் தேவனுடைய ராஜ்யத்தின் இரகசியத்தை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டிருக்கின்றது என்று அவர்களிடம் கூறியிருந்தார். இவர்கள் ஆண்டவர் இயேசுவின் வார்த்தையின் வல்லமையை கண்டவர்கள். அவர் அக்கரைக்கு போவோம் வாருங்கள் என்று கூறியிருந்தார். அந்த வார்த்தையை எந்த சூழ்நிலையும் தடுக்க முடியாது. இயேசு சொன்னபடியே அவர்கள் அக்கரைக்கு போய் சேர்வார்கள். அன்று அவருடைய சீஷர்கள் சூழ்நிலையை கண்டு பயந்து, தாங்கள் அக்கரைக்கு போகாமல் மடிந்து போகப் போகின்றோம் என்று பயப்பட்டார்கள். நாமும் சில வேளைகளிலே வாழ்வின் சூழ்நிலைகளைக் கண்டு திகிலடைந்து விடுகின்றோம். நமக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற பெரிதான வாக்குத்தத்தம் என்ன? அக்கரையாகிய மோட்ச வீட்டிற்கு நம்மை அழைத்துச் செல்ல மறுபடியும் வருவேன் என்று ஆண்டவர் இயேசு கூறியிருக்கின்றார். அவர் சொன்னதை செய்யும் தேவன். எனவே, ஆண்டவர் இயேசுவின் வார்த்தையை விசுவாசியுங்கள். வாழ்வில் வரும் நெருக்கடிகளைக் கண்டு தளர்ந்து போகாமல். அவிசுவாசத்தின் வார்த்தைகளை அறிக்கையிடாமல், அவர் எங்களை அழைத்துச் செல்ல வருவார் என்ற வாக்கை பற்றிக் கொண்டிருங்கள்.

**யோவான் 14:3**

**நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்.**

**ஜெபம்**: சர்வ வல்லமையுள்ள தேவனே, என் வாழ்விலே நான் சந்திக்கும் நெருக்கடிகளைக் கண்டு திகிலடையாமல், உம்முடைய வார்த்தையை நம்பி உமக்காக காத்திருக்க கிருபை செய்வீராக. இட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# விசுவாசத்திலே நிலைத்திருங்கள்

**1 கொரிந்தியர் 16:13**

**விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள், புருஷராயிருங்கள், திடன் கொள்ளுங்கள்.**

நோவா என்னும் மனிதனுடைய நாட்களிலே ஜனங்கள் தேவனைக் குறித்த உணர்வற்றவர்களாக வாழ்ந்து வந்தார்கள். மனிதர்களுடைய அக்கிரமம் பூமியிலே பெருகிற்று. அவர்களுடைய இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாதவைகளாக இருக்கின்றதை தேவனாகிய கர்த்தர் கண்டார். அக்கிரமம் பல்கிப் பெருகியிருந்த அந்நாட்களிலே, நோவா என்னும் மனிதனோ, தேவ பயமுள்ளவனாக நீதியைப் பிரசங்கித்து வந்தான் (2 பேதுரு 2:5). ஆனாலும் பொல்லாத சிந்தையுள்ளவர்களாகிய ஜனங்கள் புசித்தும் குடித்தும், பெண் கொண்டும் பெண்கொடுத்தும், வெள்ளம் வந்து அவர்கள் அனைவரையும் வாரிக்கொண்டுபோகுமட்டும் உணராதிருந்தார்கள். ஆண்டவராகிய இயேசு தான் மறுபடியும் வரும்போது, ஜனங்கள் இவ்வண்ணமாகவே தேவனைக் குறித்த உணர்வற்றவர்களாக தங்கள் கண்போன வழியிலே உலக களியாட்டங்களிலே வாழ்ந்து கொண்டிருப்பார்கள் என்று கூறியிருக்கின்றார். தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயஞ் செய்கின்றவர் என்று மனிதர்கள் அறிந்திருந்தும், இந்த பூமியிலே மனிதர்களிடம் விசுவாசத்தை காண்பது அரிதாக இருக்கின்றது. தாம் மறுபடியும் வரும்போது, பூமியிலே விசுவாசத்தைக் காண்பேனோ என்று ஆண்டவர் இயேசு எச்சரிப்பை கூறியிருக்கின்றார். மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய்தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும், சுபாவ அன்பில்லாதவர்களாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்கமில்லாதவர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும், துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப் பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும், தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் மாறிக் கொண்டே போகின்றார்கள். நாமோ இப்படிப்பட்டவர்களுடைய போக்கைவிட்டு விலகி, நமக்கு கொடுக்கப்பட்ட பெலத்தின்படி நீதிமானாகிய நோவாவைப் போல தேவ நீதியை எடுத்துக் கூறுவோம். விசுவாசத்திலே நிலைத்திருப்போம்.

**ஜெபம்**: நீதியுள்ள தேவனே, நீரே சர்வ வல்லமையுள்ள தேவன், நீர் எல்லாவற்றிற்கும் மேலானவர் என்னும் சத்தியத்தை மறந்து இந்த உலகத்தின் மாயைக்குள் சிக்கி விடாதபடிக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நோக்கமும் நம்பிக்கையும்

"வங்கிக் கணக்கிலே பணம் உண்டு அதினாலே நாளையைக் குறித்த கவலை எனக்கில்லை. தேசத்தின் இராணுவ பலம் அதிகம், அதனால் பாதுகாப்பைக் குறித்த பயம் எனக்கில்லை. என்னுடைய பிள்ளைகள் தலைதூக்கிவிட்டார்கள் இனி என்னை அசைக்க முடியாது. கையிலே காசு இல்லை என்றால் வங்கியிலே கடன் அட்டடைகளை எடுக்கலாம் அல்லது என்னுடைய நண்பனிடத்திலே கடன் வாங்கலாம். இந்த வேலை சரியில்லையென்றால் இன்னுமொரு வேலையை பார்க்கலாம்." இந்த அறிக்கைகளிலே என்ன தவறு உண்டு? சற்றுத் சிந்தித்துப் பாருங்கள். இப்படியாக இன்று மனிதர்கள் தங்கள் பொருளிலும், உறவிலும், உலக போக்குகளிலும் தங்கள் இருதயத்தை பதிய வைக்கின்றார்கள். இப்படிபடிட்டவர்களின் வாழ்விலே குறைவு இல்லை என்று சிலர் தங்களை அழைத்த தேவனை மறந்து விசுவாச மார்க்கத்தைவிட்டு விலகி, உணர்வற்றவர்களாக மாறிவிடுகின்றார்கள். ஐசுவரியமுள்ள ஒருவனுடைய நிலம் நன்றாய் விளைந்தது. அப்பொழுது அவன்: நான் என்ன செய்வேன்? என் தானியங்களைச் சேர்த்துவைக்கிறதற்கு இடமில்லையே. நான் ஒன்று செய்வேன், என் களஞ்சியங்களை இடித்து, பெரிதாகக் கட்டி, எனக்கு விளைந்த தானியத்தையும் என் பொருள்களையும் அங்கே சேர்த்துவைத்து, பின்பு: ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது. நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக்கொண்டான். தேவனோ அவனை நோக்கி: மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார். பிரியமானவர்களே, ஒருவேளை நம்மிடம் உலக வசதிகள் இருக்கலாம் அல்லது இல்லாதிருக்கலாம். நாம் சமுக அந்தஸ்துள்ளவர்களாகவோ அல்லது ஒடுக்கப்பட்டவர்களாகவோ இருக்கலாம். எந்த நிலையிலிருந்தாலும், பரமபிதாவே நம்மை பிழைப்பூட்டுகின்றார். அவரே நமக்கு அனுக்கிரகம் செய்கின்றவர். அவரே நம் உறைவிடம், பாதுகாப்பு என்பதை ஒருபோதும் மறந்து போய்விடாதிருங்கள். ஒரு கணப்பொழுதிலே இந்த உலக காரியங்களெல்லாம் மாறிப் போய்விடும் ஆனால் மாறாத தேவனே எங்கள் நோக்கமும் நம்பிக்கையுமாயிருக்கின்றார்.

**சங்கீதம் 71:5**

கர்த்தராகிய ஆண்டவரே, நீரே என் நோக்கமும், என் சிறுவயது தொடங்கி என் நம்பிக்கையுமாயிருக்கிறீர்.

**ஜெபம்**: என் நிலையை நன்றாக அறிந்த பரலோக பிதாவே, இந்த உலக போக்கின்படி வாழ்ந்து விசுவாச மார்க்கத்தைவிட்டு விலகிப் போய்வி டாதபடிக்கு பிரகாசமுள்ள மனக் கண்களை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# எதிர்பார்த்திருந்த சந்தோஷம் எங்கே?

பல நெருங்கங்கள் மத்தியிலே தன் குடும்பத்தை நடத்தி வந்த தகப்பனானவன், தன் பிள்ளைகள் நன்றாக படிக்க வேண்டும். உயர்ந்த உத்தியோகத்தை செய்ய வேண்டும் என்று தினமும் தன் மனதிலே சொல்லிக் கொள்வான். தகப்பனானவரின் விருப்பப்படி, அவனுடைய மகனானவன், பட்டப்படிப்பின் இறுதி பரீட்சையிலே அவன் அதி விசேஷட சித்தி பெற்று, நல்ல ஒரு உத்தியோகத்திலே அமர்ந்து கொண்டான். இனி தன் குடும்பத்தின் குறைவுகள் தீர்ந்து விடும். சந்தோஷமாக வாழ முடியும் என்று அவன் குடும்பத்தார் எண்ணியிருந்தார்கள். சில ஆண்டுகளுக்கு பின் அந்த வாலிபனின் வாழ்க்கையில் ஏற்பட்ட சில குழப்பங்களால் அவன் தாய் தந்தையர் மனவேதனை அடைந்தார்கள். அவர்கள் எதிர்பார்த்தபடி குடும்பத்தின் பொருளாதார தேவைகள் யாவும் சந்திக்கப்பட்டது ஆனால் சந்தோஷமாக வாழ முடியவில்லை. தன் மகனானவன் படித்து உழைத்தால் போதுமென்றிருந்த தந்தையார், இந்த உலகத்திலே பணத்தால் மனச் சாமாதானத்தை பெற்றுக் கொள்ள முடியாது என்பதை உணர்ந்து கொண்டார். பிரியமானவர்களே, இந்த உலகத்திலே பிள்ளைகள் படிக்க வேண்டும், நன்றாக உழைக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதில் தவறு இல்லை. ஆனால் இந்த உலகத்தினால் உண்டாகும் செல்வங்களினாலே மனத் திருப்தியும் சமாதானமும் உண்டாகும் என்று வாழ்வது ஏமாற்றத்தை தரும். ஒரு சிலர், உலக ஐசுவரியம் தங்கள் பிரச்சனைகளை தீர்க்கும் என்று தங்களை அறியாமலே பணத்தின் மீதான ஆசையை தங்களுக்குள் நுழைய இடங்கொடுக்கின்றார்கள். நீங்களோ அவ்வண்ணமாக வாழாமல், முதலாவதாக, என் பொருளாதார நிலை எப்படியாக இருந்தாலும், நான் தேவனுக்கு பயந்து அவர் வழியிலே நடக்க வேண்டும் என்று தீர்மானம் செய்ய வேண்டும். அதுவே எங்கள் அனுதின ஜெபமாக இருக்க வேண்டும். இரண்டாவதாக, என்னுடைய பிள்ளைககள் படித்தாலும் உழைத்தாலும் தேவனுடைய சத்தத்தை கேட்டு, பரிசுத்த ஆவியினால் நடத்தப் படுகின்றவர்களாக வாழ வேண்டும் என்றும், சிறு வயதிலிருந்து அவர்களுக்காக வேண்டுதல் செய்து, தேவனுடைய வழியிலே அவர்களை நடத்த வேண்டும். கர்த்தருக்குப் பயந்து அவர் வழிகளிலே நடக்கின்றவன், அவன் இந்த உலக ஐசுவரியம் உள்ளவனாக இருந்தாலும், இல்லாதவனாக இருந்தாலும் எந்நிலையிலும் அவன் பாக்கியவானாக இருப்பான்.

**சங்கீதம் 128:1**

**கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான்.**

**ஜெபம்:** நித்திய சமாதானத்தின் தேவனே, இந்த உலகத்தினால் உண்டாகும் பெருமைகள் என் வாழ்வில் நிலையான சமாதானத்தை தருவதில்லை என்பதை உணர்ந்து உம்மை பற்றிக் கொள்ள கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நியாத்தீர்ப்பின் நாள் நெருங்குகின்றது

நியாத்தீர்ப்பு, கணக்கு ஒப்புவிப்பது, கனி கொடுக்கும் காலம் போன்ற வார்த்தைகளை இன்று மனிதர்கள் பேசுவதற்கு விரும்புவதில்லை. நாம் கிருபையின் காலத்திலே வாழ்ந்து வருகின்றோம். கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர். அவர் எப்பொழுதும் கடிந்துகொள்ளார் என்றைக்கும் கோபங்கொண்டிரார். அவர் நம்முடைய பாவங்களுக்குத்தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார். ஏனெனில் ஒருவரும் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடைய வேண்டும் என்று அவர் எல்லோர்மேலும் நீடிய பொறுமையுள்ளவராக இருக்கின்றார். அதனால் நாம் நியாயத்தீர்ப்பின் நாள், கணக்கு கொடுக்கும் நாள், கனி கொடுக்கும் காலம் போன்றவற்றை குறித்து உணர்வில்லாதவர்களாக இருக்கக்கூடாது. அக்கிரமங்களின் முடிவு என்ன? தேவ வார்த்தையைக் கேட்டும் அவபக்தியாய் வாழ்பவர்களுக்கு என்ன நடக்கும்? இவைகளை குறித்து நாம் அறிந்து உணர்வடையும்படிக்காக வேதத்திலே சில சம்பவங்ளை பார்க்கலாம். 1. பாவஞ்செய்த தூதர்களை தேவன் தப்பவிடாமல், அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக்கொடுத்தார். 2. பூர்வ உலகத்தையும் தப்பவிடாமல், நீதியைப் பிரசங்கித்தவனாகிய நோவா முதலான எட்டுப்பேரைக் காப்பாற்றி, அவபக்தியுள்ளவர்கள் நிறைந்த உலகத்தின்மேல் ஜலப்பிரளயத்தை வரப்பண்ணினார் 3. சோதோம் கொமோரா என்னும் பட்டணங்களையும் சாம்பலாக்கிக் கவிழ்த்துப்போட்டு, ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார். இவைகள் யாவையும் தேவனாகிய கர்த்தர் பிற்காலத்திலே அவபக்தியாய் நடப்பவர்களுக்கு அவைகளைத் சாட்சியாக வைத்திருக்கின்றார் (2 பேதுரு 4-6). எனவே தேவனுடைய அன்பை அறிந்த நீங்கள், தேவனுடைய பரிசுத்தத்தையும் நீதியையும் நியாயத்தீர்ப்பையும் குறித்து உணர்வற்றவர்களாக வாழாமல், உங்களையே நீங்கள் சுய பரிசீலனை செய்து கொள்ளுங்கள். ஒருவரும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் உங்கள் வாழ்க்கையை சூழந்து கொள்வதற்கு முன்னதாக, சகல அக்கிரம சிந்தையையும் விட்டு விலகுங்கள்.

**2 பேதுரு 2:9**

**கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களைச் சோதனையினின்று இரட்சிக்கவும், அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத் தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார்.**

**ஜெபம்**: என் தேவனாகிய கர்த்தாவே, நாட்கள் கொடியதாய் மாறிக் கொண்டிருக்கும் வேளையிலே, கிருபையின் நாட்களை நான் வீணடிக்காதபடிக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கனி கொடுக்கும் காலம்

பல அம்சங்களை உள்ளடக்கிய நவீன கைக் கடிகாரமொன்றை தன் 18வது பிறந்த தின பரிசாக வாங்கித் தரும்படி ஒரு வாலிபன் தன் பெற்றோரை கேட்டுக் கொண்டான். அவன் பரீட்சையில் நல்ல புள்ளிகளை எடுத்ததால், அவனுடைய ஆசைப்படி அவர்களும் அந்த நவீன கைக்கடிகாரத்தை வாங்கிக் கொடுத்தார்கள். அந்தக் கைகடிகாரத்திலே, நேரம் மாத்திரமல்ல, உடற்பயிற்சியை குறித்த தரவுகள், உடல் ஆரோக்கியத்தை குறித்த துணுக்குகள் எல்லாம் அடங்கியிருந்தது. அவன் அந்தக் கைக்கடிகாரத்தை பரவசத்துன், தன் கைகளிலே எப்போதும் அணிந்து கொண்டான். தன் நண்பர்களுக்கும் அதை காட்டி அதன் அம்சங்களை குறித்து பெருமிதமாக பேசிக் கொண்டான். அவன் கையிலே கடிகாரம் இருந்தபோதும், அவன் எதையுமே நேரத்திற்கு செய்வதில்லை. நேரத்தோடு வீடு திரும்ப மறந்து விடுவான். நேரத்திற்கு படுக்கைக்கு போகாமல் தன் நண்பர்களுடன் இன்ரநெற்றில் விளையாடிக் கொண்டிருப்பான். குடும்பத்தினர் உணவு உண்ணும் நேரத்தில் அவன் சாப்பிடமாட்டான். அப்படியானால் அந்தக் கடிகாரத்தினால் அவனுக்குண்டான பிரயோஜனம் என்ன? அவனைவிட அந்தக் கைக்கடிகாரத்தை உற்பத்தி செய்து விற்பனை செய்தவர்களே அதிக பிரயோஜனம் அடைந்தார்கள். அதுபோலவே இன்று சிலர் பரிசுத்த வேதாகமத்தைக் குறித்து அதிககதிகமாக பேசிக் கொள்வார்கள். நோவா, ஆபிரகாம், யோசேப்பு, மோசே, தானியேல், யோவன் ஸ்நானன் என்று எல்லா பாத்திரங்களையும் அவர்கள் வாழ்விலே அவர்கள் கொடுத்த நற்கனிகளையும் குறித்து சிறப்பாக பேசிக் கொள்வார்கள். ஆனால் அவர்களிலிருந்த நற்பண்புகளையோ தங்கள் வாழ்க்கையில் கைகொள்ளுவதில்லை. எடுத்துக்காட்டாக, தேவனுக்கு பிரியமான தானியேல், சட்டப்படி, தேவனிடம் விண்ணப்பம் செய்பவர்களுக்கு மரண தண்டனை கிடைக்கும் என்று அறிந்திருந்தபோதும், தான் தினமும் செய்வதைப் போல தேவனை நோக்கி ஜெபிப்பதை நிறுத்தி விடவில்லை. ஆனால் இன்று மனிதர்களோ ஞாயிறு ஆராதனைகளை தங்கள் மாம்ச சௌகரியங்களின்படி மாற்றிக் கொள்கிறார்கள். அப்படிப் பட்டவர்களுக்கு இருக்கும் வேதத்தின் அறிவு அவர்கள் ஆன்மாவிற்கு எந்த பிரயோஜனத்தையும் கொடுப்பதில்லை. பிரியமானவர்களே, கனி கொடுக்கும் காலம் இது. எனவே, வேதம் கூறும் நற்கனிகளை உங்கள் வாழ்க்கையில் வெளிக்காட்டுங்கள். நல்ல கனி கொடாத மரங்களெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும் நாள் நெருங்குகின்றது.

**லூக்கா 3:8**

**மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள்**

**ஜெபம்**: நற்கனிகளை கொடுக்கும்படி அழைத்த தேவனே, உம்முடைய வார்த்தையின் வெளிச்சத்தில் வாழ்ந்து நீர் விரும்பும் நற்கிரியைகளை நான் என் வாழ்வில் வெளிக்காட்ட என்னை உணர்வுள்ளவனா(ளா)க்கும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கணக்கு கொடுக்கும் நாள்

ஒரு தோட்டத்தின் சொந்தக்காரர், தன் தோட்டத்திலே வேலை செய்யும்படிக்கு சில வேலையாட்களை தெரிவு செய்து, அவரவருக்குரிய பொறுப்பை அவர்கள் கையிலே கொடுத்து, தான் திரும்பி வரும்போது, ஒவ்வொருவரும் தங்களுக்கு கொடுக்கப்பட்டத்தின் கணக்கை செலுத்த வேண்டும் என்று கூறி தூர தேசத்திற்கு சென்றிருந்தார். சொந்தக்காரர் வர தாமதித்ததினால், சிலர் ஏனோ தானோ என்று வேலை பார்த்து வந்தார்கள். அவர் வரும் செய்தியை அறிந்த பின் நாங்கள் காரியங்களை ஒழுங்கு படுத்துவோம் என்றிருந்தார்கள். வேறு சிலரோ, தோட்டத்தின் சொந்தக்காரர் தங்களை நம்பித் தந்த பொறுப்பை மிகவும் கருத்துடன் நிறைவேற்றும்படி கடுமையாக உழைத்தார்கள். எதிர்பாராதவிதமாக திடீரென ஒரு நாள் அந்தத் தோட்டத்தின் சொந்தக்காரர் திரும்பிவந்தார். பயபக்தியுடன் வேலை செய்தவர்கள் அவரைக் கண்டு பெருமகிழ்ச்சி அடைந்தார்கள். ஏனோ தானோ என்று வேலை பார்த்தவர்கள் தோட்டத்தின் சொந்தக்காரரைக் கண்டு அதிர்ச்சியடைந்தார்கள். பிரியமானவர்களே,இரவிலே திருடன் இன்ன நேரத்திலே வருவான் என்று தெரியாதது போல, நம்முடைய எஜமானனாகிய இயேசுவும்,நாம் எதிர்பாராத நேரத்திலே வருவார். எனவே ஒழுங்கு படுத்த வேண்டியவைகளை உங்களுக்கு கிடைக்கும் சந்தர்ப்பத்திலே தாமதிக்காமல் ஒழுங்கு படுத்துங்கள். இயேசு இந்த உலகத்திலே வாழ்ந்த நாட்களிலே, சகேயு என்னும் மனிதனை சந்தித்தார். அவன் அநியாயக் காரனாக இருந்ததினால் சமுதாயத்தினால் ஏற்றுக் கொள்ளப்படாத பாவியான மனிதனாக இருந்தான். அவன் இயேசுவைக் கண்ட போது, சந்தோஷத்தோடே அவரை அழைத்துக்கொண்டு போனான். சகேயு கர்த்தரை நோக்கி: ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான். அதாவது தன்னுடைய வாழ்க்கையின் கணக்கை தனக்கு கிடைத்த முதலாவது சந்தர்ப்பத்திலே அவன் தீர்த்துக் கொண்டான். இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது என்றார். பிரியமானவர்களே, ஆண்டவர் இயேசுவை அறிந்த நீங்கள், அவர் மறுபடி வரும்போது மகிழ்ச்சியடையும்படிக்கு இன்று உங்கள் கணக்கை சரி செய்து கொள்ளுங்கள்.

**ரோமர் 14:12**

**ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக்குறித்து தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்.**

**ஜெபம்**: என்மீது அன்புகூர்ந்த தேவனே, ஆண்டவராகிய இயேசுவை சந்திக்கும் நாளிலே பெரும் மகிழ்ச்சியடையும்படிக்கு நான் என் வாழ்வை உம் வார்த்தையின்படி காத்துக் கொள்ள கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நாம் பேசும் வார்த்தைகள்

பொதுவாக இரு தரப்பினர்களுக்கிடையே வழக்கொன்று நடைபெறும் போது, எதிரெதிராய் நிற்கும் இருதரத்தாரும் தங்கள் நிலையைக் குறித்த வார்த்தைகளைக் கூறுவார்கள். இருதரத்தாரும் தமது தரப்பு நியாயத்தைக் குறித்ததான நிலைமையை சாட்சிகள் வழியாக வார்த்தைகள் மூலம் தெரிவிப்பார்கள். அவர்களும் தங்கள் வார்த்தைகள் வழியாக தங்கள் சாட்சிகளை தெரிவிப்பார்கள். இருதரத்தாரின் சட்டத்தரணிகளும் தங்கள் கட்சிக் காரரை நியாயப்படுத்தும்படி வார்த்தைகளை கவனமாக கூறுவார்கள். இவர்கள் யாவரின் வார்த்தைகளையும் கருத்துடன் கவனித்துக் கொண்டிருக்கும் நடுவர்கள் (Jury team) தங்கள் முடிவை நீதிபதியிடம் தெரிவிப்பார்கள். நீதிபதி தீர்ப்பை வார்த்தை வழியாக கூறுவார். மனிதர் பேசும் வார்த்தைகளுக்கு பின்விளைவுகள் உண்டு. சிலர் நல்ல வார்த்தைகளைப் பேசி, நீதியையும் நியாயத்தையும் நடப்பிக்கின்றார்கள். சிலரின் வார்த்தைகள் மற்றவர்களின் வாழ்வை மேம்படச் செய்கின்றது. அதே வேளையிலே சில மனிதர்களின் வார்த்தைகள் மற்றவர்களின் வாழ்வை கெடுத்துவிடுகின்றது. ஞானிகளின் நாவு அறிவை உபயோகப்படுத்தும் மூடரின் வாயோ புத்தியீனத்தைக் கக்கும். ஆரோக்கியமுள்ள நாவு ஜீவவிருட்சம் நாவின் மாறுபாடோ ஆவியை நொறுக்கும். கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம் பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவனுக்குப் பிரயோஜன முண்டாகும்படி பேசுங்கள் என்று தேவ ஊழியராகிய பவுல் அறிவுரை கூறியிருக்கின்றார். சிலரோ கெட்ட வார்த்தைகளையும், சீர்கேடான பேச்சுக்களையும், ஆகாத சம்பாஷணைகளையும் பேசுகின்றார்கள். அதனால் தாங்களே தங்கள் வாழ்க்கையை தீட்டுப்படுத்திக் கொள்கின்றார்கள். சிலர் சந்தர்ப்பத்திற்கேற்றபடி இராஜ தந்திரமாக பேசிக் கொள்வார்கள். மனுஷர் பேசும், கெட்ட வார்த்தைகளைக் குறித்து மட்டுமல்ல, வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்புநாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். எனவே, அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்லவேண்டுமென்று நீங்கள் அறியும்படிக்கு, உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக. நம்முடைய வாயின் வார்த்தைகள் தேவனுக்கு பிரியமுள்ளதாக இருப்பதாக.

**கொலோசெயர் 4:6**

உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக.

**ஜெபம்:** உன்னதமான தேவனே, நான் தேவ சாயலிலே நாள்தோறும் வளர்ந்து பெருகும்படிக்கு, நான் பேசும் வார்த்தைகளைக் குறித்து கவனமுள்ளவனா(ளா)க இருக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நன்மையை கண்டடைகின்றவன் யார்?

ஒரு குறிப்பிட்டவிளையாட்டுப் போட்டியிலே, 50 மையில் மாரத்தான் ஓட்டப்பந்தையப் போட்டி நடைபெற்றது. அதிலே அநேக போட்டியாளர்கள் கலந்து கொண்டார்கள். ஆரம்பத்திலே சிலர் மெதுவாயும், வேறு சிலர் துரிதமாகவும் ஓடிச் சென்றார்கள். அந்த ஆரம்ப ஓட்டத்தைக் கண்ட சில பார்வையாளர்கள் ஒவ்வொருவரைக் குறித்தும் பலதரப்பட்ட கருத்துக்களை கூறி விமர்சித்தார்கள். ஆனால் அந்தப் பந்தையப்போட்டி முடிவடைவதற்கு இன்னும் சில மணித்தியாலங்கள் இருந்தது. அந்த கால எல்லைக்குள்ளே, அந்த ஓட்டப்பந்தையப் போட்டியில் பல மாற்றங்கள் ஏற்படலாம். அது முடிந்த பின்பும், ஒழுங்காக ஓடியவர்கள் யார் அல்லது ஒழுங்கு முறையை மீறியவர்கள்யார் என்பதைக் குறித்த முடிவை, அந்த குறிப்பிட்ட ஓட்டப்போட்டியின் நடுவரே தீர்மானிப்பார். பிரியமானவர்களே, கடந்த சில நாட்களாக நியாத்தீர்ப்பையும், கணக்கு ஒப்புவித்தலையும் குறித்து ஆராய்ந்து பார்த்தோம். நாம் ஒவ்வொருவரும் அந்த மாரத்தான் ஓட்டப் போட்டியாளர்களைப் போல ஓடிக் கொண்டிருக்கின்றோம். ஓட்டத்தின் முடிவிலே நடுவராகிய ஆண்டவர் இயேசு அதற்குரிய பலனை நமக்கு அளிப்பார். எனவே மற்றவர்களின் ஓட்டத்தைக் குறித்து நியாயந் தீர்ப்பது நம்முடைய காரியமல்ல. நாம் யாவரும் பரலோகப் பந்தையப் பொருளை நோக்கி ஓடிக் கொண்டிருக்கின்றோம். சிலர் மெதுவாயும், சிலர் துரிதமாயும் ஓடிக் கொண்டிருக்கின்றார்கள். துரிதமாக ஓடுகின்றவர்களின் நாளைய நிலை என்ன என்பதையும், மெதுவாக ஓடுகின்றவர்களின் நாளைய நிலை என்ன என்பதையும் நாம் அறியோம். இன்று நாம் யாவரும் நிர்மூலமாகாமல் இருப்பது தேவனுடைய கிருபை என்பதை மறந்து விடக்கூடாது. இன்று மனிதர்கள் மற்றவர்களுடைய வாழ்க்கையை நியாயந்தீர்க்கின்றவர்களாவும், மற்றவர்களுடைய கணக்கை குறித்து கரிசணையுடையவர்ளாகவும் இருப்பதால், தங்கள் நிலையை மறந்து பின்வாங்கிப் போய்விடுகின்றார்கள். இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன். உங்கள் மேல் நீடிய பொறுமையாயிருக்கின்ற ஆண்டவர் இயேசு மற்றவர்கள் மேலும் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கின்றார். ஒருவரும் கெட்டு அழிந்து போவது அவருடைய சித்தமல்ல. எனவே காலத்திற்கு முன் யாதொன்றைக் குறித்தும் நீங்கள் தீர்ப்புச் சொல்லாதிருங்கள்.

**1 கொரிந்தியர் 10:12**

**இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்**

**ஜெபம்:** நீதியுள்ள தேவனே, நீரே யாவற்றையும் அறிந்தவர். நான் மற்றவர்களின் வாழ்வைக் குறித்து அவர்களை நியாயந்தீர்க்காதபடிக்கு, என் நாவை நான் காத்துக் கொள்ள எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# ஜெபம் செய்வோம்!

உங்கள் வாழ்க்கையை சர்வ வல்லமையுள்ள பிதவாகிய தேவனிடம் ஒப்படைக்க விரும்பினால், பின்வரும் ஜெபத்தை கருத்தோடு ஏறெடுங்கள்!

பரலோகத்தில் இருக்கின்ற எங்கள் அன்பான பிதாவே,

நீர் சர்வ வல்லமையுள்ள தேவன்! உம்முடைய குமாரனாகிய இயேசுக் கிறிஸ்துவை எங்களுக்காக தந்தருளினதிற்காக உமக்கு நன்றி! இயேசுக்கிறிஸ்துவுக்கூடாக நீர் அனுப்பின தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவருக்காக உமக்கு நன்றி!

கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து இப்பூமியில் மனிதனாக வந்து, பரிசுத்தமான வாழ்க்கை வாழ்ந்து, என்னை மீட்பதற்காக பாடுகள்பட்டு தம்முடைய பரிசுத்தமான இரத்தத்தை சிந்தி, சிலுவையிலே எனக்காக மரித்து, பாவத்தை வென்று உயிர்த்தெழுந்தார் என முற்றிலும் விசுவாசிக்கின்றேன். இன்று நான் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவை என் வாழ்வின் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்கின்றேன்! இதுவரைகாலமும் நீர் என்னை நடத்தி வந்த உம்முடைய மிகுந்த இரக்கங்களுக்காக உமக்கு ஸ்தோத்திரம்!

மற்றவர்களை குறித்திருக்கின்ற கசப்பை என் மனதில் இருந்து அகற்றிவிட இன்று நான் தீர்மானிக்கின்றேன்! பிறர் எனக்கு செய்த குற்றங்களை மன்னித்துவிட இன்று நான் தீர்மானம் எடுக்கின்றேன். பரிசுத்த ஆவியானவரே எனக்குத் துணைசெய்யும்!

என்னுடைய பாவ பழக்கங்களை விட்டுவிட இன்று நான் தீர்மானிக்கின்றேன். நான் அறிந்தும் அறியாமலும் செய்த பாவங்களை மன்னித்தருளும்! இன்னும் நான் உணராமல் செய்துவரும் தீய பழக்கங்கள் என்னில் இருக்குமாயின் அவைகளை எனக்கு வெளிப்படுத்தும். தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்து கொள்ளும்; என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும்.வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்.

தேவனே, மோட்ச வாழ்க்கைக்கு அவசியமானதை என் வாழ்க்கையிலே முதலாவதாக நான் தேட என்னை வழி நடத்தும். இன்று நான் என்னுடைய தேவைகளை உம்முடைய பாதத்தில் வைக்கின்றேன், என் இக்கட்டான சூழ்நிலையிலிருந்து என்னை பூரணமாக விடுவித்து தேவ சமாதானம் என் உள்ளத்தை ஆழ கிருபை செய்தருளும்.

கர்த்தாவே நீர் என்னுடைய ஜெபத்தைக் கேட்டு அதற்கு பதில் தருகின்ற ஜீவனுள்ள தேவன் என்று நான் முற்றிலும் விசுவாசிக்கின்றேன்! உம்மை உண்மையாய்த் தேடுகிற யாவருக்கும் சமீபமாகவுள்ள கர்த்தர் நீர்! பலமுள்ளவனுக்காகிலும் பலனற்றவனுக்காகிலும் உதவிகள் செய்வது உமக்கு லேசான காரியம்!

காரிருள் சூழ்ந்திருக்கும் இந்த உலகத்திலே, உம்முடைய வார்த்தையின் வெளிச்சத்திலே ஜீவிக்க பிரகாசமுள்ள மனக் கண்களைத் தாரும்.

எனக்காக மரித்து உயிர்த்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபம் கேட்கிறேன் நல்ல பிதாவே, ஆமென்!

# அன்பான வாசகர்களுக்கு!

## உங்கள் ‘**உள்ளான மனிதன்**’ பிரதியை பெற்றுக் கொள்ளுங்கள்

உள்ளான மனிதன் சஞ்சிகையை ஒரு சபையினூடாக பெற்றிருந்தால், தொடர்ந்தும் மாதாந்தர பிரதியை பெற்றுக்கொள்ள, அந்த சபையின் போதகரை தொடர்பு கொள்ளுங்கள். நீங்கள் வசிக்கும் இடத்தில் உள்ள சபையின் ஊடாக உள்ளான மனிதன் சஞ்சிகை விநியோகிக்கப்படாவிடில், அடுத்த பக்கத்திலுள்ள படிவத்தில் உங்கள் விபரங்களை பதிவு செய்து, இந்தியாவில் இந்த சஞ்சிகையை உங்களுக்குக் கொடுத்த சபைப் போதகரின் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

மாதம் இந்த சஞ்சிகையை வாசித்த பின்பு மற்றய சகோதர சகோதரிகளுடனும் இதனை பகிர்ந்து கொள்ளுங்கள். இரட்சிப்பு தேவனிடத்திலிருந்து வரும்!

**தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்**. (யோவான் 3:16)

அந்த ஆச்சரியமான மாறாத தேவ அன்பு இன்றும் யாவரையும் இருளின் அதிகாரத்திலிருந்து ஆச்சரியமான தேவ ஒளிக்குள் வரும்படியாய் அழைக்கின்றது. ஆமென்!

**கிருபையின் கூடாரம் அப்போஸ்தல சபை**

**ரொரன்ரோ, கனடா ☎ 416.613.2909 gtachurch.ca**



gtachurch.ca

உள்ளான மனிதன் மாதாந்த இலவச பிரதி

# விண்ணப்பப் படிவம்

**முழுப் பெயர் FULL NAME:**

______________________________________________

______________________________________________

**முகவரி ADDRESS:**

(தபால் உங்கள் இருப்பிடத்திற்கு வந்தடைய தேவையான முழு முகவரி விபவரங்களையும் குறிப்பிடவும்)

______________________________________________

______________________________________________

______________________________________________

### மேலதிக விபரங்கள்

**whatsApp** வாயிலாக தியான குறிப்புகளை பெற விரும்புகின்றேன் ☐

**Viber** வாயிலாக தியான குறிப்புகளை பெற விரும்புகின்றேன் ☐

(**whatsApp Viber** வாயிலாக பெற விரும்பினால் உங்கள் கை தொலைபேசி இலக்கத்தைக் கீழே குறிப்பிடவும்)

**கை தொலைபேசி MOBILE PHONE:** ______________________

**மின் அஞ்சல் E-MAIL:**

______________________________________________

**விண்ணப்பப் படிவம் அனுப்பப்பட வேண்டிய முகவரி**

**THE INNER MAN – GTAC**
**7700 MARKHAM ROAD**
**P. O. BOX 3052,**
**MARKHAM, ON L3S 4T1 - CANADA**

MAIL THE APPLICATION FORM TO THE ABOVE-MENTIONED ADDRESS

gtachurch.ca

gtachurch.ca